அமரர்

# ஆறுமுகம் தில்லைநாதன்

அவர்களின் நினைவாக...



## கற்க கசடற...

03.03.1955 – 02.10.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

## ஆறுமுகம் தில்லைநாதன்

நினைவாக

# கற்க கசடற

04.11.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : கற்க கசடற
அமரர் ஆறுமுகம் தில்லைநாதன் நினைவு மலர்

பொருள் : கல்வியியல்

பக்கங்கள் : 56

பதிப்பு : 04.11.2011

தொடர்புகட்கு : 90/3, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



**அமரர் ஆறுமுகம் தில்லைநாதன்**

**(03.03.1955 – 02.10.2011)**

எங்கள் அன்புத் தந்தை அமரர் ஆறுமுகம் தில்லைநாதன் அவர்கள் ஓர் ஆய்வாளராக, ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அறிவியல் பூர்வமாக வாழ்க்கையை அணுகியவர். முற்போக்கான, மூட நம்பிக்கைகளற்ற வாழ்க்கை வாழ்ந்தவர்.

அவரது ஆசிரியப் பணியினையும் கல்வியினையும் தீராத வாசிப்பினையும் நினைவுகூர்ந்து இச் சிறு தொகுப்பு நூலை அன்னாருக்குக் காணிக்கையாக்குகிறோம்

மனைவி, மக்கள்,
மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


| | |
|---|---|
| கல்வி (திருக்குறள்) | **05** |
| அறிவுடைமை (திருக்குறள்) | **07** |
| கல்வி (நாலடியார்) | **09** |
| அறிவு: ஓர் அறிமுகம் | **12** |
| கல்வியின் நோக்கங்கள் | **15** |
| இலங்கையின் கல்வித்துறை | **20** |
| கற்றலுக்காகக் கற்றல் | **26** |
| தரமான கல்விக்குத் தரமான வாசிப்பு | **31** |
| பரீட்சைக்கான வாசிப்பின் படிமுறைகள் | **36** |
| பிள்ளைகளின் கல்வி: ஆய்வுக் குறிப்புக்கள் | **39** |
| கற்றலைப் பாதிக்கும் காரணிகளும் ஆசிரியரும் | **45** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *திருவள்ளுவர் காட்டும் கல்வி*

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்; அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

**எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு.**

எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

**கண்உடையர் என்பவர் கற்றோர்: முகத்துஇரண்டு**
**புண்உடையர் கல்லா தவர்.**

கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப்படுகின்றவர் கற்றவரே; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவர்.

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.**

மகிழும்படியாகக் கூடிப் பழகி. (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்.**

செல்வர்முன் வறியவர் நிற்பதுபோல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவரே உயர்ந்தவர்; கல்லாதவர் இழிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு.**

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

**யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு.**

கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும்போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும்; ஆகையால் ஒருவன் சாகும்வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு எழுபிறப்பிலும் உதவும் தன்மையுடையதாகும்.

**தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக்கல்வியையே) விரும்புவர்.

**கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடுஅல்ல மற்றை யவை.**

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வி தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய ) செல்வம் அல்ல.

நன்றி: தமிழ் இணையக் கல்விக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் பார்வையில் அறிவுடைமை

**அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்.**

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும்.

**சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

மனத்தைச் சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்பது அறிவு.**

தான் சொல்லுவன எளிய பொருளையுடையனவாகப் பதியுமாறு சொல்லித், தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும்.

**உலகம் தழீஇயது ஒட்பம்: மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு.**

உலகத்து உயர்ந்தவரை நட்பாக்கிக்கொள்வது சிறந்த அறிவு; முன்னே மகிழ்ந்து விரிதலும் பின்னே வருந்திக் குவிதலும் இல்லாதது அறிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு.**

உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

**அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃதுஅறி கல்லா தவர்.**

அறிவுடையவர் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே எண்ணி அறியவல்லார்; அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்.

**அஞ்சுவது அஞ்சாமை பேதைமை: அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்.**

அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும்; அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடைவரின் தொழிலாகும்.

**எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்.**

வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.**

அறிவுடையவர் (வேறொன்றும் இல்லாதிருப்பினும்) எல்லாம் உடையவரே ஆவர்; அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

நன்றி: தமிழ் இணையக் கல்விக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலடியார்

**குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு.** 131

தலைமயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மை அழகல்ல. மனத்தளவில் உண்மையாக நடந்துகொள்கிறோம் என்னும் நடுவு நிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகாம்.

**இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாம்காணோம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து.** 132

கல்வி இவ்வுலக இன்பத்தைத் தரும்; பிறர்க்குத் தருவதால் குறையாது; (கற்றவர்) புகழை எங்கும் பரவச் செய்யும்; (தாம்) உயிரோடு இருக்கும்வரை அழியாது. ஆதலால் எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமையைப் போக்கும் மருந்தை யாம் கண்டதில்லை.

**களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்**
**விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்**
**கடைநிலத்தோ ராயினும் சுற்றறிந் தோரைத்**
**தலைநிலத்து வைக்கப்படும்.** 133

களர் நிலத்தில் உண்டான உப்பைச் சான்றோர், நல்ல நன்செய் நிலத்தில் விளைந்த நெல்லைவிட மேன்மையாகக் கருதுவர். அதுபோலக் கீழ்க்குடியிற் பிறந்தவர்களானாலும் கற்றறிந்தவராயின் அவர்களை மேலான குடியினும் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்தல் வேண்டும்.

**வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயிற் கேடில்லை;**
**மிக்க சிறப்பின் அரசர்செறின் வவ்வார்;**
**எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன**
**விச்சைமற் றல்ல பிற.** 134



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த இடத்திலிருந்து (மனத்திலிருந்து) பிறரால் கவர்ந்து கொள்ள இயலாது; தமக்குக் கிடைத்துப் பிறருக்குக் கொடுத்தால் அழிவதில்லை; மேலான படை வலிமையையுடைய மன்னர் சினந்தாலும் கவர்ந்து கொள்ள முடியாது. ஆதலால், ஒருவன் தன் மக்கட்குப் 'செல்வம்' எனச் சேர்த்து வைக்கத்தக்கது கல்வியே; பிற அல்ல!

**கல்வி கரையில கற்பவர் நாள்சில;**
**மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்**
**ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்**
**பாலுண் குருகின் தெரிந்து.** 135

கல்விகள் முடிவில்லாதன; ஆனால் கற்பவருடைய வாழ்நாட்கள் சில! சற்றுப் பொறுமையாக நினைத்துப் பார்த்தால் அந்தச் சில வாழ்நாட்களிலும் பிணிகள் பலவாக இருக்கின்றன. ஆதலால் நீரை நீக்கிப் பாலைப் பருகும் அன்னப் பறவையைப் போல அறிவுடையார், நூலின் தன்மைகளை அறிந்து நல்ல நூல்களையே கற்பர்.

**தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்**
**காணிற் கடைப்பட்டான் என்றிகழார் - காணாய்**
**அவன்துணையா ஆறுபோய் அற்றேநூல் கற்ற**
**மகன்துணையா நல்ல கொளல்.** 136

படகு செலுத்துபவனைப் பழமையான சாதிகளில் கீழ்ச்சாதியைச் சார்ந்தவன் என இகழமாட்டார்கள் மேலோர்! நீ காண்பாயாக! அப்படகு ஓட்டுபவனின் துணைகொண்டு ஆற்றைக் கடப்பது போலாகும். நல்ல சாத்திரங்களைக் கற்ற கீழ்மகனின் துணைகொண்டு நூல் பொருளைக் கற்றல்.

**தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்**
**இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ**
**நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்து**
**உம்பர் உறைவார் பதி.** 137

குற்றமற்ற, பழமையான நூற்கேள்வியுடையவராய், பகைமையில்லாதவராய், கூர்மையான அறிவுள்ளவராய் விளங்கும் கற்றோர் குழுவில் சேர்ந்து அளவளாவி மகிழ்தலைவிட இன்பம் உடையதாயின், அகன்ற வானத்தின் மேல் தேவர்கள் வாழும் திருநகரைக் காண முயல்வோம். (கற்றோருடன் சேர்ந்து பெறும் இன்பத்தை விடத் துறக்க இன்பம் சிறந்ததன்று.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை**
**நுனியின் கரும்புதின் றற்றே - நுனிநீக்கித்**
**தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா**
**ஈரமி லாளர் தொடர்பு.** 138

ஒலிக்கும் கடலினது குளிர்ச்சி பொருந்திய துறையையுடைய வேந்தனே! கற்றறிந்தவரின் நட்பு, நுனியிலிருந்து கரும்பைத் தின்பது போலாம். அதன் அடிப்பகுதியிலிருந்து தின்பது போலாம், நற்பண்பும், அன்பும் இல்லாதார் நட்பு.

**கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளும் தலைப்படுவர் - தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.** 139

பழமையான சிறப்பினையுடைய அழகிய பாதிரிப்பூவைச் சேர்ந்திருப்பதால் புதிய மண்பானையானது, தன்னிடத்தில் உள்ள தண்ணீருக்குத் தான் நறுமணத்தைக் கொடுத்து, அத்தண்ணீரையும் நறுமணமுள்ளதாக்கும். அதுபோல கல்லாரே ஆயினும் கற்றாரைச் சார்ந்து அவர்போல் நடந்தால் நல்லறிவு நாளும் உண்டாகப் பெறுவர். (புதிய மண்பானையானது பாதிரிப்பூவைச் சேர்தலால் தன்னிடமுள்ள தண்ணீருக்கு நறுமணம் தருவது போல, கல்லாதார்க்கும் கற்றவர் சேர்க்கையால் அறிவு உண்டாகும் என்பது கருத்து).

**அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது**
**உலகநூல் ஓதுவ தெல்லாம் - கலகல**
**கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்**
**போஒம் துணையறிவார் இல்.** 140

எல்லையற்ற கல்விகளுக்குள்ளே மெய்ஞ்ஞான நூல்களைக் கற்காமல் விட்டுவிட்டு, வெறும் உலக அறிவை மட்டும் தரும் நூல்களைக் கற்பதெல்லாம் 'கலகல' என்னும் வீணான சலசலப்பே யாகும்! இத்தகைய இவ்வுலக அறிவு நூல்களைக்கொண்டு பிறவியாகிய தடுமாற்றத்தைப் (துன்பத்தை) போக்கும் வழியை அறிபவர் எங்கும் இல்லை.

நன்றி: தமிழ் களஞ்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு

அறிவு (Knowledge) என்பது உணர்தலாலும், அனுபவத்தாலும், கற்பதாலும் கிடைக்கப்பெறுபவைகளாகும். அறிவு என்பது ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரை கிடைப்பவைகளாகவே உள்ளன. அதனை படித்தவர்களுக்கு மட்டுமே அறிவு இருப்பது போன்றும், அறிஞர்கள் என்றும் ஒரு தோற்றப்பாடு பொதுவாக அநேகமானோரிடம் காணப்படுகின்றன. அத்தோற்றப்பாடு முற்றிலும் தவறானது. அறிவு என்பது எல்லோருக்கும் உண்டு, மனிதரல்லாத விலங்குகளுக்கும் உண்டு. அவற்றை இயற்கையறிவு, உணர்வறிவு, படிப்பறிவு, பட்டறிவு, கல்வியறிவு, தொழில்சார் அறிவு, துறைச்சார் அறிவு, அனுபவ அறிவு, பொது அறிவு, ஆள்மனப்பதிவறிவு என பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம். இந்தப்பிரிவுகளை பல்வேறு உட்பிரிவுகளாக வகுத்துக்கூறலாம். எடுத்துக்காட்டாக அறிவைக் கூட சிலர் பேரரறிவு, சிற்றறிவு என்று வகைப்படுத்தும் முறைமையும் உள்ளது.

## இயற்கையறிவு

இயற்கையறிவு என்பது இயற்கையைப் பற்றி அறியும் அல்லது கற்கும் அறிவன்று. அது இயற்கையிலேயே கிடைக்கப்பெறும் அறிவைக் குறிக்கும். ஒரு குழந்தை பிறந்தவுடன் கிடைக்கப்பெறும் அறிவு இயற்கையறிவு ஆகும். அது முதலில் பசியை உணரும் அறிவை இயற்கையறிவாகவே கொண்டுள்ளது. அதனாலேயே பசித்தால் குழந்தைகள் அழத்தொடங்கிவிடுகின்றன. அதன்பின் உணரும் அறிவை பெறுகின்றது. அதாவது தாயின் முலைக்காம்பை தொட்டதும் அதையுணர்ந்து (அழுகையை நிறுத்தும்) பாலருந்தத் தொடங்கிவிடும். இதன் வளர்ச்சிப்போக்கில் பாலைத் தரும் தாயை அறியும் அறிவையும், அவரிடத்தில் அன்புகொள்ளும் அறிவையும் பெற்றுக்கொள்ளும். இவைகளை இயற்கையறிவு எனலாம்.

## அறிவும் உணர்வும்

தமிழில் அறிவு எனும் சொல்லுக்கான வரைவிலக்கணத்தையே; ஆங்கிலச் சொல்லான Knowledge கொண்டிருப்பதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் தமிழில் விலங்குகளுக்கு ஐந்தறிவு என்றும், மனிதர்களுக்கு ஆறறிவு என்றும் கூறும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. ஆனால் ஆங்கிலத்திலோ Five Sense, Sixth Sense என்று கூறும் வழக்கைக்கொண்டுள்ளனர். அதாவது இந்த "sense" எனும் சொல் அறிவு, புலன், உணர்வு போன்றவற்றுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புக்கொண்ட ஒரு வரைவிலக்கணத்தைத் தருகின்றது. தமிழில் ஐம்புலன் என்று கூறும் ஒரு கூற்று இருப்பதனையும் நோக்கலாம்.

**கல்வி அறிவு**

ஒரு பாடசாலையில் கற்பிப்பதை ஒரு மாணவன் உடனடியாக விளங்கிக்கொள்கின்றான் என்றால், அது அம்மாணவரின் கிரகிக்கும் ஆற்றலின் தன்மையையே காட்டுகிறது. அதேவேளை ஒழுங்காக பாடங்களில் கவனம் செலுத்தாத மாணவனை அறிவற்றவன் என்று கூறவும் முடியாது. சிலவேளை அம்மாணவன் விளையாட்டுத் துறையிலோ, வேறு எதாவது ஒரு துறையிலோ அறிவதில் ஆர்வம் மிக்கவராக இருக்கலாம். இங்கே அறிவு என்பது தாம் ஆர்வம் கொள்ளும் துறைச்சார்ந்து பெற்றுக்கொள்ளப் படுகின்றது. எனவே எல்லோரது அறிவும் ஒரே மாதிரியானதாகவும், ஒரே தன்மை கொண்டதாகவும் இருப்பதில்லை. அதேவேளை கல்வியால் கிடைக்கப்பெறும் அறிவை கல்வியறிவு என்று மட்டுமே கூறலாம்.

**எழுத்தறிவு**

எழுத்தறிவு என்பது எழுத வாசிக்க அறிந்துள்ள அறிவைக் குறிக்கும். அதேவேளை ஒருவர் சிறப்பாக எழுதக்கூடியவராயின் அவரை சிறப்பான எழுத்தாற்றல் மிக்கவர் என்பதே பொருத்தமானதாகும். இந்த எழுதும் ஆற்றலையும் சிலர் முறைப்படி கற்று பெற்றுக்கொள்பவர்களும் உளர். தமது ஆர்வத்தின் காரணமாக அற்புத ஆற்றல்மிக்க எழுத்தாளர்களாய் ஆவோரும் உளர்.

**ஆள்மனப்பதிவறிவு**

ஆழ்மனப்பதிவறிவு என்பது தாம் பிறந்த, வாழ்ந்த சூழலிற்கு ஏற்ப பிறராலோ, வாழும் நாட்டின் அரசியல் அமைப்புக்கு அமைவாக ஆழ்மனதில் பதிந்து அதுவே சரியென ஏற்றுக்கொள்ளும் அறிவெனலாம். எடுத்துக்காட்டாக: பிறந்த ஒரு குழந்தையை அது தானாக உணர்ந்துக்கொள்ளும் முன் வேறு ஒரு தம்பதியினர் எடுத்து தமது குழந்தை என்று கூறி வளர்ப்பதால், அக்குழந்தை தமது பெற்றோர் அவர்களே என ஆழ்மனதில் பதிந்துக்கொள்ளும் அறிவு ஆழ்மனப்பதிவறிவு எனலாம். இன்னுமொரு எடுத்துக்காட்டாக: GOD எனும் ஆங்கிலச் சொல்லின் ஒலிப்பை இந்தியத் தமிழர்கள் "காட்" என்பதே சரியெனும் அறிவையும், இலங்கைத் தமிழர்கள் "கோட்" என்பதே சரியெனும் அறிவையும் கொண்டிருப்போம். ஒரே தமிழரான நாம் ஒரு வேற்று மொழி சொல் தொடர்ப்பில் இத்தகைய உறுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு கொண்டிருக்கிறோம் எனில் நாம் பிறந்த வளர்ந்த நிலப்பரப்பின் அரசியல் எல்லைக்கோடுகள் நிர்ணயிக்கும் சிலவிதிமுறைகள் எம்மனதில் ஆழப்பதிந்து அதுவே சரியெனும் மனநிலைக்கு நாம் சென்று விடுவதே காரணமாகும். இதனையே ஆழ்மனப்பதிவறிவு எனப்படுகின்றது. குறிப்பாக சிவபெருமான் அடித்ததாலேயே எல்லோரதும் முதுகில் தழும்பு இருக்கின்றது என இந்துக்கள் நம்பும் நம்பிக்கை போன்ற ஒவ்வொரு மதங்களின் உள்ள வெவ்வேறு கருத்துக்களை அப்படியே உள்வாங்கி அதுவே சரியென கொள்ளுதலும் ஆழ்மனப்பதிவறிவின் வெளிப்பாடே ஆகும்.

**பட்டறிவு**

அறிவு என்பது ஒரு மனிதனைப் பற்றியோ, ஒரு நிறுவனத்தைப் பற்றியோ அல்லது ஏதாவது ஒரு பொருள் பற்றியோ (அறிந்து)தெரிந்து கொள்வது ஆகும். இந்த அறிவைப் பெறும் வழிகள்:
1. கூரிய நோக்கு (perception)
2. கல்வி கற்கும் முறை (learning process)
3. விவாதித்து முடிவுக்கு வருதல் (debate)
4. செவிகளைத் திறந்து வைத்திருத்தல் (open ears) - கேள்வி அறிவு
5. தனக்குத்தானே விவாதிக்கும் முறை(reasoning)

நாம் அனுபவத்தினாலோ, புத்தகங்களைப் படிப்பதன் மூலமாகவோ அல்லது ஏதாவது காரண, காரியங்களினாலோ பெறுகிறோம். அறிவு என்பதன் முழுமையான விளக்கம் நம் தத்துவ மேதைகளிடையே காலம் காலமாக நடந்து வரும் விவாதமாகும். இன்றும் இந்த விவாதம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அறிவு என்பதற்கு சரியான விளக்கம் தரவேண்டுமென்றால் ஒரு செயல் ஏரண விதிகளால் (logically) நியாயப்படுத்தபட்டதாகவும், உண்மையாகவும், அனைவராலும் நம்பக்கூடியதாகவும் இருக்க வேண்டும். (Plato) ஆனால் இவை மட்டுமே ஒரு செயலை அறிவு என்று சொல்லுவதற்கு தகுதியான அளவுகோல் இல்லை என்று வாதிடுவோரும் உண்டு. அறிவு பல வகைப்படும்.

ஒவ்வொரு கணத்திலும் நாம் பாடுபட்டு (அனுபவித்து) அறியும் அறிவு பட்டறிவு (experience). ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஏற்படும் அறிவுத்திறனை சூழ்நிலை அறிவு என்று வகைப்படுத்தலாம். புத்தகங்களில் பெறுவதை புத்தக அறிவு என்றும், சமூக வழி பெறுவதை சமூக அறிவு என்றும் பல வகை உண்டு. சூழ்நிலை அறிவு மொழி, கலாசாரம், பண்பாடு இவற்றோடு நெருங்கிய தொடர்பு உடையது.

நன்றி: தமிழ் விக்கிப்பீடியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *கல்வியின் நோக்கங்கள்*

**- அருளானந்தம் சிறீகாந்தலட்சுமி -**

கல்வி - சமூக ரீதியில் நோக்கின் மனிதனை மனிதனாக வாழ வைப்பது; மனிதப் பண்புகளையும் மனிதநேயத்தையும் உருவாக்குவது. பொருளாதார ரீதியில் நோக்கின் பயன்தரக்கூடியதும் இலாபம் தரக்கூடியதுமான தனிநபர் சமூக முதலீடு; சமூகத்தின் பொருளாதார வினைதிறனை அதிகரிக்கும் ஒரு காரணி; தேசங்களின் அபிவிருத்தி, கொள்கை. திட்டமிடல் ஆகியவற்றில் முதலிடம் பெறுவது. அரசியல் ரீதியில் நோக்கின் சர்வதேச வல்லரசுப் போட்டியில் முதலிடம் பெறுவது; தேசங்களின் பலத்தை அளவிட உதவிடும் கருவி. தலைமை தாங்குவதற்கு மட்டுமன்றி மனிதன் மாளாது வாழ்வதற்கும் அவசியமானது. கலாசார ரீதியில் நோக்கின் எண்ணங்களைப் பண்படுத்துவது; வாழ்நிலையைப் பண்படுத்துவது.

கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக நாம் அறியக்கூடிய அல்லது எமக்குக் கிடைக்கக்கூடிய மேற்கத்தேய சிந்தனைகள் கைத்தொழில் சமூகம் ஒன்றின் தோற்றத்துடன் இணைந்ததாக இருக்க, தமிழ்ச் சமூகத்தின் சிந்தனைகளோ இரு ஆயிரியங்களைக் கடந்து நிற்கிறது. **கல்வி கரையில கற்பவர் நாள் சில மெல்ல நினைக்கின் பிணிபல** என்னும் நாலடியார், **தொட்டனைத்து ஊறும் மணற்கேணி நாளும் கற்றனைத்து ஊறும் அறிவு** என்னும் திருக்குறள், **நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு** என்னும் ஔவையின் முதுமொழி போன்றன எமக்கு உணர்த்தி நிற்பது கல்வியின் முக்கியத்துவம் என்பது தமிழ் மக்களால் இன்று நேற்று உணரப்பட்டதொன்றல்ல என்பதையே.

**கல்வியினாலே பெருந்தொகையான மக்கள் வாசிக்கக் கூடியவர்களாக விளங்கினாலும், தாம் வாசிப்பனவற்றிலே எவை வாசிக்க வேண்டியவை என்பதைப் பிரித்தறிய முடியாதுள்ளனர்** என்கிறார் பிரான்சிஸ் பேக்கன். **மக்களுடைய சிந்தனையில், மனப்பாங்கில், செயலில் ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான, முன்னேற்றகரமான மாற்றங்களை விளைவிக்கின்ற செயற்பாடே கல்வி** என விளம்புகிறார் நம்முடன் வாழும் சிற்பி அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியின் நோக்கங்கள்

கல்வியின் நோக்கங்களை குறுங்காலப் பயன்கள், நீண்டகாலப் பயன்கள், உடனடிப்பயன்கள் என மூவகைப்படுத்துகிறார் இந்திய கல்வியியல் சிந்தனையாளரில் ஒருவரான எஸ். சந்தானம் அவர்கள். (சந்தானம் 1987) ஒவ்வொரு மாணவனும் அன்றாடம் கற்கும் பாடங்களின் முடிவில் அவனிடம் எதிர்பார்க்கப்படுபவை உடனடிப் பயன்கள் எனவும், குறிப்பிட்ட பாடம் ஒன்றை மாணவன் கற்பதனூடாக ஏற்படும் பயன்கள் குறுங்காலப் பயன்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. குறுங்காலப் பயன்களே கல்வியின் குறிக்கோள் என அழைக்கப்படுகின்றன. இந்தக் குறிக்கோள்கள் ஒவ்வொன்றும் நிறைவேறும் போது நீண்டகாலப் போக்கில் ஏற்படுபவை நீண்டகாலப் பயன்கள் எனப்படுகின்றன. இந்தப் பயன்கள் கல்வியின் நோக்கங்கள் எனப்படுகின்றன. இலங்கையில் கல்விக்கொள்கை காலத்துக்குக் காலம் பல மாற்றங்களைச் சந்தித்திருப்பதுடன் 1943 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை காலத்துக்குக் காலம் ஒழுக்க நோக்கம், அறிவு நோக்கம், தொழில் நோக்கம், சமூக நோக்கம் ஓய்வு நோக்கம், இசைந்த வளர்ச்சி நோக்கம் என புதிய புதிய நோக்கங்களை உள்ளடக்கியிருப்பதை C.W.W கன்னங்கராவின் தலைமையில் 1943 இல் உருவாக்கப்பட்ட விசேட கல்வி ஆணைக்குழுவினரின் விதப்புரை (அமர்வு அறிக்கை XXIV-1943), 1972-76 காலப்பகுதியை உள்ளடக்கிய ஐந்தாண்டுத் திட்டம், 1979 இன் கல்வி மீளாய்வுக்குழு அறிக்கை, 1981 இன் கல்வி வெள்ளை அறிக்கை 1989 இல் முன்மொழியப்பட்ட தேசியக்கல்விக் கொள்கை, 2000 ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விக்கொள்கை போன்றவற்றிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

இதுவரை பின்பற்றப்பட்ட குறிக்கோள் மையக் கலைத்திட்டத்திலிருந்து (Objective Based) மாறாக 2007 ம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய கலைத்திட்டம் முற்றுமுழுதாக அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் என்பவற்றை உள்ளடக்கிய தேர்ச்சி மையக்கல்வியாக (Competency based) அமையப்பெறவுள்ளது. (நவாஸ்தீன் 2006)

## முன்பள்ளிக் கல்வி

மனிதவளர்ச்சிக் கட்டங்களின் அடிப்படையில் நோக்கின் குழந்தையிடம் நற்பழக்கங்களை உருவாக்கி உடல் உள வளர்ச்சிக்கு உதவுதல், எதிர்காலக் கல்விக்கும் பயனுள்ள வாழ்க்கைக்கும் ஆயத்தப்படுத்தல் போன்றன கிட்டத்தட்ட 3-5 வயது வரையான காலப்பகுதியை உள்ளடக்கும் முன்பள்ளிக் கல்வியின் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமாக இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தன்னம்பிக்கை, சமுதாய வாழ்வில் தனது பங்கையும் உரிமைகளையும் உணர்தல், அழகுணர்ச்சி, உடற்பயிற்சியின் முக்கியத்துவம் என்பவற்றைக் குழந்தையிடம் ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டது. **தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா** போன்ற முதுமொழிகள் நமக்கு உணர்த்தி நிற்பதும் இதைத்தான். உடல், உள, சமூக, மனவெழுச்சி விருத்தி, பாடசாலைக்கான தயார்படுத்தல், உள்ளடங்கிய ஒட்டுமொத்த விருத்திக்குப் பொருத்தமான வாய்ப்புகளையும் அனுபவங்களையும் வழங்குவது முன்பள்ளிக் கல்வியின் நோக்கமாகும்.

முன்பள்ளிப்பருவக் கல்வி ஏற்பாடுகள் பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றலின் முழுமையான வளர்ச்சிக்கும் வாழ்நாள் முழுவதற்குமான கல்விக்குமான அத்திவாரத்தை இடுகின்றன. பிற்காலத்தில் உருவாகும் சிறந்த உளப்பாங்குகள், கற்றலை விரும்பும் மனநிலை என்பன உருவாக இப்பருவத்தின் வளர்ச்சி மிக முக்கியமானது. (சந்திரசேகரம் 2006) முழுக்க முழுக்கப் பெற்றோரிலும் முன்பள்ளி ஆசிரியரிலும் தங்கியிருக்கும் இப்பருவத்தினரின் வளர்ச்சிக்காக வாசிக்கும் நிர்ப்பந்தம் இவர்களுக்குண்டு.

## ஆரம்பக் கல்வி

மொழித்திறன் விருத்தி, ஆக்கவேலை, சூழலுக்கேற்ற தொழில், பாடசாலையையும் சமூகத்தையும் இணைத்தல் போன்றன 6-10 வயது வரை கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளை உள்ளடக்கும் ஆரம்பக் கல்வியின் நோக்கமாக இருக்கிறது. எதிர்கால சமூகத்தைத் தாங்கக்கூடிய தூண்களாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய பருவமாக இதைக் கொள்ளலாம்.

**குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளின் வாழ்க்கையை என்னிடம் ஒப்படையுங்கள் அதற்குப்பிறகு அதன் வாழ்க்கை அமைப்பை எப்படிப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு கவலையில்லை** எனக் கூறும் பெஸ்டலோசி என்ற தலைசிறந்த கல்வியாளரின் கூற்று (சந்தானம் 1987), **குழந்தைகளினுடைய மனதின் இரகசியத்தையும், ஆசிரியர் பயிற்சி என்னும் கலையையும், ஆசிரியரின் திறமைகளையும் அறிய முற்படுகையில் ஒவ்வொரு குழந்தையிடமும் நான் எனது ஆசிரியனை, ஆசானைக் காண்பேன்** என்ற வாசகத்தின் உண்மையை, பயனைச் சரிபார்த்து குழந்தைகளின் நடவடிக்கைகளின் உட்பொருளினுள் ஆழப் புகுவதன் மூலம், குழந்தையின் உள்ளாற்றல்களைப் பயன்படுத்தி, அன்பு பரந்த மனப்பாங்கு, நகைச்சுவை உணர்வு, துடியார்வம், யதார்த்தத்தை அறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான அணுகுமுறை ஆகியவற்றைத் தட்டியெழுப்பி இவர்களுக்கு அவசியமான சமூக அம்சங்களை அளிக்கலாம் என உறுதியாக நம்பி ஆறுவயதுக் குழந்தைக்கு படிப்பு சொல்லிக் கொடுப்பதை தனது மிக விருப்புக்குரிய தொழிலாக ஏற்ற ருஷ்ய விண்வெளிக் கழகத்தின் தலைவரும் இயற்பியல் விஞ்ஞானியுமான அமனஷ் வலியின் கூற்று (அமனஸ்வீலி 1987) என்பன ஆரம்பக்கல்விப் பருவத்தின் அத்தியாவசியத்தையும் வீட்டுச் சூழல் ஒன்றிலிருந்து முதன் முதலான பாடசாலை என்ற நிறுவனத்திற்குள் நுழைகின்ற ஆறுவயது குழந்தையின் முக்கியத்துவத்தையும் தெளிவாகக் காட்டப் போதுமானது.

## இடைநிலைக் கல்வி

குடியாட்சிப் பண்பு நிறைந்த எதிர்கால மக்களை உருவாக்குதலும், உயர்கல்விக்கோ அல்லது ஏதாவது ஒரு தொழிலுக்கோ செல்லக்கூடிய தகுதியை உண்டாக்குவதுமே 10-16 வரையான காலப்பகுதியை உள்ளடக்கும் இரண்டாம் நிலைக்கல்வியின் நோக்கமாகும். இடைநிலைக் கல்வியின் கிட்டத்தட்ட 20% மாவது தொழிற்கல்வி வாய்ப்பு அளிக்கப்பட வேண்டிய கட்டமாக இது உணரப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவரும் சமூக வளர்ச்சித் திட்டங்களில் தொடர்ச்சியாக ஒரு மாதமாவது பங்குபெற வைக்கப்படல் வேண்டும். மரவேலை, உலோக வேலை, அச்சடித்தல், கணினித் தொழினுட்பம் போன்றவற்றுக்கான தொழிற்கூடங்களை ஒவ்வொரு பாடசாலையும் கொண்டிருத்தல் வேண்டும்.

17-18 வயது வரையான இரண்டு வருடங்களை உள்ளடக்கும் உயர்கல்வியானது பல்கலைக்கழகக் கல்விக்கான தயார்படுத்தலில் முழுக்க முழுக்க ஈடுபட வைக்கும் அதேசமயம் தொழிற்கல்வியையும் வளர்த்தெடுக்கும் நோக்கத்தைக் கொண்டது. கிட்டதட்ட 80% தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பருவமாக இது உணரப்பட்டிருக்கிறது. உயர்கல்விக்குள் நுழையும் வாய்ப்பற்ற மாணவர்கள் முழுக்க முழுக்க தொழிற்கல்வியில் பயிற்சியைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் பல தொழினுட்பக் கல்லூரிகளின் உருவாக்கத்தை இது வேண்டி நிற்கிறது.

## உயர்கல்வி

பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கம் மாணவரிடையே உண்மை அறிவை வளர்ப்பதும் அதைப் பரப்புவதுமாகும். சமூகத்தை தாங்கக்கூடிய தலைவர்களையும் சமூகத்தை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்லும் துறை வல்லுனர்களை உருவாக்குவதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியின் முதன்மை இலக்கு

கல்வியின் நோக்கங்கள் பல. எனினும் அதன் பிரதான நோக்கம் சுயசிந்தனையும் மனித நேயமுமிக்க மனிதனை உருவாக்குதல் ஆகும். சுயசிந்தனையுள்ள மனிதனை உருவாக்குவதற்கு அறிவுசார் சிந்தனை அவசியம். **எதனையும் உற்றுணர்ந்து, சீர்தூக்கிப் பார்த்து, நிதானித்து, எதிர்விளைவுகள் பக்க விளைவுகளை அடையாளங் கண்டு, பயன்விளைவு ஆராய்ந்து, அனுகூலங்கள் பிரதிகூலங்களை கருத்தில் கொண்டு, ஒன்றைக் கூறும் நம்பும் தீர்மானிக்கும் தீர்வுகாணும் செயற்படுத்தும் அறிவும் மனப்பாங்கும் உடைய உள்ளம் அறிவுசார் உள்ளம் என்றும் அத்தகைய சிந்தனை அறிவுசார் சிந்தனை என்றும் கூறலாம்** என படியாதவனின் படிப்பு என்ற நூல் கூறுகிறது. **தெள்ளிய அறிவும் நன்நடத்தையும் கொண்ட பண்பட்ட மக்களை உருவாக்குவதே கல்வி** என்ற மாட்டின் லூதர், **மனிதனை மனிதனாக வாழ வைப்பதே உண்மைக் கல்வி** என்ற சுவாமி விவேகானந்தர், **அன்பை உணருதல், அன்பு காட்டுதல் என்றால் என்ன என்று கண்டுபிடித்தல், அன்பு காட்டுதல் என்பவையே கல்வி** என்ற இந்திய கல்விச் சிந்தனையாளர் ஜே.கிருஸ்ணமூர்த்தி, **உன்னத மரபுகளையும் அன்பையும், இரக்கத்தையும் ஒருவரிடம் பேணி வளர்க்கவும் முழுமையான வாழ்க்கையை வாழ உதவுவதுமே கல்வி** என்ற கல்வியியலாளர் ராதாகிருஷ்ணன் போன்றோரின் சிந்தனைகள் எமக்கு வெளிக் காட்டுவது மனிதத்தை மனிதர்களிடம் உருவாக்குவதே உண்மைக் கல்வியின் நோக்கம் என்பதையே. அறிவுசார் சிந்தனையானது மனிதநேயத்துடன் இணைந்ததாக இல்லாதுவிடின் கல்வியின் நோக்கம் நிறைவேறுவது கடினம். அறிவுசார் சிந்தனையை உருவாக்குவதற்கு பரந்த வாசிப்புத்திறன் முக்கியம். தான் எதிர்கொள்ளும் பிரச்சனைகளிலிருந்து விடுவிப்பதற்கு தனித்துவமான, தனக்குத் தானே நீதிபதியாகக் கூடிய வல்லமையை அளிப்பது இந்த பரந்துபட்ட வாசிப்புத் திறனே. வாசிப்புத் திறனை ஊக்குவிக்கக்கூடிய பிரதான தளம் நூலகம் என்பதில் எவ்வித கருத்துமுரண்பாட்டுக்கும் இடம் இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்வித்துறை

இலவசக் கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு 1945. சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா கல்வி அமைச்சராக இருந்த போது அறிமுகப்படுத்தப்பட்டதினால் அவரை இலவசக்கல்வியின் தந்தை எனப் போற்றுகின்றனர்.

1943 ஆம் ஆண்டில் கன்னங்கரா குழுவின் அறிக்கை வெளியானது.

இலண்டன் பல்கலைக்கழக கல்லூரியுடன் இணைந்ததாக கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரி 1921 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியையும், கொழும்பு மருத்துவக் கல்லூரியையும் இணைத்து, கொழும்பில் இலங்கைப் பல்கலைக் கழகம் 1942 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இதன் முதலாவது துணைவேந்தராக பிரித்தானியரான சேர். ஐவர் ஜெனிங்ஸ் பதவி வகித்தார்.

துணைவேந்தராகப் பதவி வகித்த முதலாவது இலங்கையர் சேர் நிக்கலஸ் அட்டிகல.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்லூரி 1972 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1974 ஒக்ரோபர் 06 முதல் இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அமைவிடம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மட்டக்களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரி 01.08.1981 இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 01.10.1986 இல் கிழக்குப் பல்கலைக் கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அமைவிடம் வந்தாறுமுல்லை, மட்டக்களப்பு.

இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் நாட்டின் உயர் கல்வித்துறையில் 1980 ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

இதன் தலைமையகம் கொழும்பு மாவட்டத்தில் நாவல, நுகேகொட எனுமிடத்தில் உள்ளது. இதன் துணைவேந்தர் பதவியை முதன் முதலில் வகித்தவர் பேராசிரியர் டீ. பி. குணதிலக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனும் நிறுவனம் 1978 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலம் நிறுவப் பட்டது. இந்த நிறுவனம் இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களது நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருப்பதுடன், பல்வேறு பீடங்களுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்து அனுமதியும் வழங்குகிறது.

இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு உதவுவதற்காக 1986 ஆம் ஆண்டில் மகாபொல நம்பிக்கை நிதியம் ஏற்படுத்தப்பட்டது. மகாபொல புலமைப்பரிசில் 1981 ஆம் ஆண்டு முதல் வறிய மாணவர்களுக்கும், அதி திறமைப் புள்ளிகளுடன் பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இளைஞர் அமைதியின்மை தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சின்பேரில் 1989 ஆம் ஆண்டு நாட்டின் உயர் கல்வித்துறை வரலாற்றில் இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி முறை அறிமுகம் செய்யப்பட்டது.

1991 முதல் செயற்பட ஆரம்பித்த இக்கல்லூரி முறையை 1996 ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் நிறுத்தியது.

இக்கல்லூரிகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்துடனும் இணைக்கப் பட்டு அவற்றுக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தாய்மொழி மூலம் அல்லது சுதேச மொழி மூலம் பட்டப்படிப்புக் கற்கைகள் உருவான ஆண்டு 1960.

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி முதன்முதலில் 1893 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்து வைக்கப்பட்ட இடம் கொழும்பு, மருதானை.

இலங்கை முஸ்லீம்களது கல்வி வளர்ச்சியில் முதன்மை வாய்ந்த நிறுவனமாக ஜாமி ஆ நளீமிய்யா உள்ளது. இக்கலாநிலையம் 1973 ஆம் ஆண்டு அன்றைய கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

நளீம் ஹாஜியார் எனும் தனவந்தரால் இக்கலாநிலையமும் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமும் உருவானது. இங்கு 7 ஆண்டுகள் கல்விகற்று வெளியேறுபவர்கள் இஸ்லாமிய அரபுத்துறையில் கலைமாணிப் பட்டம் பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் வகுப்புநிலைகள் முன்னர் தரம் (Grade) எனக் குறிப்பிடப்பட்டது. 1984 சனவரியிலிருந்து இம்முறை ஆண்டு (Year) என மாற்றப்பட்டது. இதன்படி முன்னர் முதலாம் தரம் (Grade 1) என இருந்தது இரண்டாம் ஆண்டு (Year 2) என ஆகியது. காரணம் பாலர் வகுப்பு எனும் முறைமை நீக்கப்பட்டு அவ்வகுப்பு ஆண்டு 1 (Year 1) என ஆகியது. 1999.01.01 முதல் மீண்டும் தரம் என அழைக்கப்படுகின்றது.

ஆசிரிய சேவை உருவாக்கப்பட்டமைக்கு அமைய 01.01.95 முதல் அதிகரிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

இலங்கை அதிபர் சேவை எனும் சேவையும் தற்போது நடைமுறையில் உள்ளது. இதன் பிரகாரம் அதிபர்கள் தரம் (Grade) III, II, I என 3 தரங்களாக நிலைப்படுத்தப்பட்டனர்.

இலங்கை கல்விச் சேவை (SLES) 1985 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) எனத் தரம் உயர்த்தப் பட்டது. இது வகுப்பு III, II, I என 3 நிலைகளைக் கொண்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவனம் (National Institute of Education – NIE) விசேட நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 1985 இல் உருவாக்கப்பட்டது. இது கொழும்பு, மகரகம எனுமிடத்தில் இயங்குகின்றது.

இந்நிறுவனம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் 2 நிலையங்கள் கல்வி தொடர்பாக இயங்கின. அவை
- பாடவிதான அபிவிருத்தி நிலையம் (கொழும்பு)
- முகாமைத்துவ நிலையம் (களுத்துறை)

இவை இரண்டும் இணைக்கப்பட்டே 1985 இல் தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது 22 பணிப்பாளர்களின் கீழ் 22 பிரிவுகளாகத் தேசிய கல்வி நிறுவகம் இயங்கியது. இப் பணிப்பாளர்களுக்கு பணிப்பாளர் நாயகம் ஒருவர் தலைமை வகிக்கின்றார்.

தேசிய கல்வி நிறுவகம் பின்வரும் 6 பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

1. சட்டப்படி இலங்கையிலே ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பயிற்சிகளை வழங்குகிறது.
2. பாடசாலைகளில் கற்பிக்கப்பட வேண்டிய பாடவிதானம் முழுவதையும் தயாரிக்க, மீளாய்வு செய்ய வழிகாட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆசிரியர்களுக்கு உதவும் பாடத்திட்ட வழிகாட்டிகளைத் தயாரிக்கின்றது.
4. கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், தொடர் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைத்தல் என்பவற்றிற்குப் பொறுப்பாகவுள்ளது
5. பல்கலைக்கழகங்களுக்குச் சமனான 1 ஆம் பட்டம், 2 ஆம் பட்டம், டிப்ளோமா ஆகிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இலங்கையில் முதன்முதலாகப் பல்கலைக்கழகம் அல்லாத நிறுவனத்துக்குப் பட்டம் வழங்கும் சட்டபூர்வமான அங்கீகாரம் அரசினால் தேசிய கல்வி நிறுவகத்துக்கே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
6. கல்விசார் ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றது.

1943 ஆம் ஆண்டு வெளியாகிய கன்னங்கரா குழு அறிக்கையில் ஆசிரிய பயிற்சியின் முக்கியத்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. அதன் விதப்புரைப்படி 1948 இல் இலங்கைப் பல்கலைக்கழகமும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கல்வி டிப்ளோமா வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

1945 இல் இலவசக் கல்வி அறிமுகத்துடன் அதிகளவில் அதிகரித்த பாடசாலைகளில் ஆசிரியர்களும் அதிகளவில் சேர்க்கப்படலாயினர். 1960 களில் ஆசிரியப் பயிற்சி முழுப்பொறுப்பையும் அரசு ஏற்க நேரிட்டது.

இலங்கையில் 1985 ஒக்ரோபர் முதலாம் திகதி இலங்கையின் கல்வித் துறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதான கல்வியியல் கல்லூரிகள் (College of Education) எனும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. ஒரே நேரத்தில் பின்வரும் 6 கல்வியியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன.

| | |
|---|---|
| பஸ்துன்ரட்ட கல்வியியற் கல்லூரி | - களுத்துறை |
| சியன கல்வியியற் கல்லூரி | - வெயாங்கொட |
| ஹாபிற்றிகம கல்வியியற் கல்லூரி | - மீரிகம |
| ஊவா கல்வியியற் கல்லூரி | - பண்டாரவளை |
| சாரிபுத்த கல்வியியற் கல்லூரி | - நிட்டம்புவ |
| மகாவலி கல்வியியற் கல்லூரி | - உயன்வத்தை |

அப்போதைய கல்வி, இளைஞர் விவகார, தொழிநுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரிலேயே இவை உருவாகின. ஏற்கனவே ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளாக இருந்தவையே இவ்வாறு கல்வியியற் கல்லூரிகளாக மாற்றம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை புது முறையிலான ஆசிரிய சேவை முன்பயிற்சி நிறுவனங்களாகச் செயற்படத் தொடங்கியவை என்பது குறிப்பிடத் தக்கது.

1986 இல் 30 ஆம் இலக்க கல்வியியற் கல்லூரி சட்டத்தைப் பாராளு மன்றம் ஏகமனதாக அங்கீகரித்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இச்சட்டவாக்கத்தினால் ஏலவே அமைக்கப்பட்ட கல்வியியற் கல்லூரிகளுக்கு அதிகாரபூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டது.

இவை 1985 இல் உருவான தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் இயங்கும் வழிமுறைகளும் வகுக்கப்பட்டன.

இக்கல்லூரிகளுக்கு தேசிய கல்வி டிப்ளோமா பட்டம் வழங்கவும் படிப்படியாகக் கல்விமாணிப் பட்டம் வழங்கவும் ஏற்பாடுகள் சட்டத்தின் குறிப்பிடப்பட்டு உள்ளன.

பின்னர் பின்வரும் ஆண்டுகளில் குறிப்பிடப்படும் இடங்களிலும் கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன.

1987 – நில்வள கல்வியியற் கல்லூரி - அக்குரஸ்ஸ
1992 – சிறீபாத கல்வியியற் கல்லூரி - அக்குரஸ்ஸ
1992 – அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி - அட்டாளைச்சேனை
1993 – வவுனியா கல்வியியற் கல்லூரி - வவுனியா
1995 – மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி - மட்டக்களப்பு
1998 – யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி - கோப்பாய்

கல்வியியற் கல்லூரிகளில் மாணவர்களுக்கு ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக் கல்வி, உடற்கல்வி, பௌத்தம் போன்ற பல்வேறு பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் ஏதாவது ஒரு பாடசாலையில் இணைக்கப்பட்டு ஒரு வருடம் உள்ளகப் பயிற்சி வழங்கப்படுகின்றது. மூன்று வருட காலப் பகுதியிலும் கல்வி நடவடிக்கைக்கென கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படுகின்றது.

தற்போது 18 கல்வியியற் கல்லூரிகள் நாடு முழுவதும் உள்ளன.

கல்வியியற் கல்லூரிகளும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளும் ஆசிரிய தொழில்சார் பயிற்சிகளை அளித்தாலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

பாடசாலைகள் அனைத்திலும் 31.01.1979 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும்.

இச் சங்கத்திற்கு அதிபர் தலைவராக இருப்பார். நிர்வாகசபை உறுப்பினர்கள் வருடத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுவார்கள்.

**பழைய மாணவர்கள் சங்கம்**

பாடசாலையின் நன்மைகள், தீமைகள், அபிவிருத்தி இவைகளிலேயே பழைய மாணவர்கள் அக்கறையுடையவர்களாக இருப்பார்கள். எனவே பழைய மாணவர் சங்கம் பாடசாலையில் அக்கறை உள்ளதொரு இயக்கமாகக் கருதப்படல் வேண்டும்.

அதிபர் தலைவராக இருப்பார். ஏனைய அங்கத்தவர்கள் தேவைக்கேற்ப சுற்றுநிருபத்தின்படி இடம்பெறுவர். பழைய மாணவர் சங்கமும் அங்கத்தவர்களும் பாடசாலைக்கு உதவலாமே தவிர பாடசாலை நிர்வாகத்தில் தலையிடக்கூடாது.

**மாகாண அடிப்படையில் கல்வி அமைப்பு**

மாகாண சபை ஆட்சிமுறை 1987 ஆம் ஆண்டு 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்திற்கும் தொடர்ந்து வந்த மாகாணசபைச் சட்டத்திற்கும் பின்னர் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி கல்வி நிருவாக முறை மத்திய அரசு, மாகாண அரசு என இரு முறைகளாகியது. மாகாணக் கல்வி அமைச்சும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையும் புதிதாக உருவாக்கப்பட்டன. மாகாணக் கல்வி அமைச்சுக்கு உயர் அதிகாரியாகக் கல்விச் செயலாளர் இருப்பார்.

கல்வி சம்பந்தப்பட்ட பல அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கத்திற்கும் இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

நன்றி : கேசரி தகவல் களஞ்சியம் 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலுக்காகக் கற்றல்
## (Learning to Learn)

## - க. பேர்னாட் -

கல்வி பற்றிய சிந்தனைகளும் கருத்து வெளிப்பாடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. புதிய நூற்றாண்டுக்கான கல்வி, புதிய சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான கல்வி, மாறிவரும் சமூகத்தைப் பொறுப்பேற்பதற்கான கல்வி, தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான கல்வி, மாறிவரும் உலகில் வாழ்வதற்கான கல்வி, தேர்ச்சி மையக் கல்வி எனப் பல்வேறு கல்விச் சிந்தனைகள் இன்று ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இன்றைய உலகினதும் எதிர்கால உலகினதும் தேவைகளுக்கேற்ப கல்விமீதான கவனம் அதிகரித்து வருவது கண்கூடு. நடைமுறையில் காணப்படுகின்ற, எதிர்பார்க்கப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் கல்வியூடாகத் தீர்வு காண முனையப்படுவதே கல்வி மீதான கவனம் அதிகரித்தமைக்குக் காரணமாகும். எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகள், சவால்களுக்கெல்லாம் கல்வியைக் காரணம் கூறும் போக்கு கண்டிக்கத்தக்கதொன்றாயினும், பலதரப்பட்ட பிரச்சனைகளுக்கெல்லாம் கல்வியினூடாகத் தீர்வு காணப்படலாம் என்பது ஓர் அடிப்படை நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையாலே கல்விமீது அதிகரித்த கவனம் செலுத்தப்படுகிறது. கல்விமீதான அதிகரித்த கவனம் காரணமாக ஆசிரியர் கல்வி மீதான கவனமும் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலும் புதிய கல்விச் சீர்திருத்தங்களுடன் ஆசிரியர் கல்வி தொடர்பாகவும் பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே பொதுக்கல்வியிலும் சரி, ஆசிரியர் கல்வியிலும் சரி ஏனைய முறைசாராக் கல்வியிலும் முறையில் கல்வியிலும் கற்றல் செயற்பாடுகள் (Learning Activities) தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும் அதிகரித்துவரும் நிலையில் **கற்றலுக்கான கற்றல்** (Learning to learn) எண்ணக்கரு வலுப்பெற்று வருகின்றது.

### கற்றல் கற்றலுக்காகவே

உலகரீதியான தற்போதைய சவால்கள் தனிப்பட்டவர்களின் அபிவிருத்தித் தேவையை வேண்டி நிற்கின்றது. அதாவது தனிப்பட்டவர் ஒவ்வொருவரும் உலகரீதியாக சிந்தித்து உள்ளூர் ரீதியாகச் செயற்படக் கூடியவர்களாக (Think Globally, Act Locally) உருவாக்கப்பட வேண்டிய தேவை உலக சவால்களால் தேவைப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தொடர்பில் Delores Commission 21 ஆம் நூற்றாண்டுக்கான கல்வி நோக்கங்களை (Goals of Education for the 21st Century) சிபாரிசு செய்கையில் முக்கியமான ஒரு கல்வி நோக்காக கற்றலுக்கான கற்றல் என்ற புதிய நோக்கத்தையும் சிபாரிசு செய்திருக்கின்றது. உலகில் கற்க முனைகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் குறிப்பாக ஆசிரியர் சமுதாயத்திற்கும் மாணவர் சமுதாயத்திற்கும் இன்று கற்றலுக்கான கற்றல் என்கின்ற எண்ணக்கரு விளக்கம் அவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறன் உடையவையாக அமைத்துக் கொள்ள இச்சிந்தனை அவசியமாகின்றது. இன்றைய மாணவர்கள் எதிர்பார்க்கைகளை நிறைவேற்றவும் இது உதவுகின்றது. கற்றல் செயற்பாட்டின் முக்கியத்துவத்தினை புதிய நூற்றாண்டுக்கான கல்விமுறைகள் வலியுறுத்தி நிற்கும் இக்கால கட்டத்தில் கற்றலுக்கான கற்றல் என்ற நோக்கு மேலோங்கி நிற்கின்றது. கற்றலுக்கான கற்றலுக்கு அடிப்படைகளாக கல்வியின் நான்கு தூண்கள் Delores Commission அடிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

**கல்வியின் நான்கு தூண்கள்** (Four pillars in Education)

கற்றல் செயற்பாடுகளுக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கும் கல்வியே இன்று நடைமுறையில் காணப்படுகின்றது. கற்றல் வெறுமனே விடய அறிவுத் தொகுதிக்காக நிகழும் நிகழ்வு மட்டுமல்ல, மனிதனது பல்வேறு செயற்பாடுகளுக்கு பல வழிகளிலும் இட்டுச் செல்லும் செயற்பாடுகளாக அமைகின்றன. கல்வி இலக்குகளின் பகுப்பியலின்படி பல்வேறு தேர்ச்சிகள், அடைவுகள் அடையப்படும் போது மனிதன் சமுதாயத்தின் சவால்களுக்கு முகம் கொடுத்து வாழக்கூடியவனாகின்றான்.

எனவே கற்றலுக்கான கற்றல் செயற்பாடுகள் முக்கியம் பெறுகின்றன. கற்றலுக்கான கற்றல் என்பது முக்கியமான நான்கு செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காகவே அவை கல்வியின் நான்கு தூண்கள் என குறிப்பிடப்படுகின்றன. அச்செயற்பாடுகள் நான்கும்.

1. அறிவதற்காக் கற்றல் - Learning to know
2. ஆற்றுவதற்காக் கற்றல் - Learning to do
3. வாழ்வதற்காகக் கற்றல் - Learning to be
4. சேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல் - Learning to live together

இச் செயற்பாடுகள் கற்றலுக்கான கற்றலுக்கு இட்டுச் செல்வதற்கூடாக மனிதனை புதிய சவால்களுக்கு முகங்கொடுத்து வாழப்பழக்குகிறது. எனவே கல்வியின் தூண்கள் பொதுக் கல்வி முறையிலும் ஏனைய கற்றல் மறைகளிலும் தனித்தனியாகவும், கூட்டாகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இச்செயற்பாடுகளைக் குறிப்பாக ஆசிரியர்களும், மாணவ ஆசிரியர்களும் அறிந்து செயற்படுவது சிறந்த விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவதற்காகக் கற்றல்

கல்விச் செயற்பாடுகள் யாவும் அறிதல் சார் செயற்பாடுகளாக நோக்கப்படுகின்ற வகையில் அறிவதற்காகக் கற்றலானது முக்கியத்துவம் பெறுகின்றது. அறிவுசார் அம்சங்களின் விருத்தி இச்செயற்பாட்டுக்குள் அமைவது முக்கியமானதாகும். இச்செயற்பாட்டினூடாக பல்வேறு அறிவுத் தொகுதிகளின் விருத்தியும், வெவ்வேறு துறைகளுக்கான வாண்மை விருத்தியும் உள்ளடங்குகின்றபோது அதற்காகவே மனிதன் வாழ்க்கை முழுவதற்கும் கற்கவேண்டிய தேவையும் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களில் கற்க வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. அறிவுத் தொகுதியின் நாளாந்த விளைவான வளர்ச்சி இதற்கான தேவையை அளவுக்குள் அடங்குகின்றபோது அவற்றுடன் தொடர்புபட்ட பல்வேறு மாற்றங்கள் அடுத்தடுத்த கணங்களில் மாற்றமடைந்து கொண்டிருக்கின்ற நிலையில் அவ்விடயங்களையும் கற்போர்கள் தேடி அறிந்து கொள்வதற்காக கற்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. பல விடயங்களையும் அறிந்து கொள்வதற்காக கற்றல் நிகழும் போது அறிவதற்காகக் கற்றல் நிகழ்கின்றது. இன்றை மாணவர்களுக்கு பரந்த ஆசிரியர்களும் அத்தகைய வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்கு அறிவதற்கான கற்றல், கற்றலுக்கான கற்றலுக்கு இட்டுச் செல்கிறது.

## ஆற்றலுக்காகக் கற்றல்

அறிவதற்காக மட்டும் கற்பதனூடாக அறிவுத்தொகுதியை விருத்திசெய்துகொண்டு புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து வாழ்வதென்பது கடினமானதொரு செயற்பாடாகும். அறிவுத் தொகுதியை வாழ்க்கையில் பிரயோகிப்பதற்காகவும் கற்க வேண்டிய தேவை உள்ளது. இத்தொடர்பில் ஆற்றலுக்காக கற்றல் செயற்பாடுகள் அடுத்து முக்கியம் பெறுவது கண்கூடு. இதனூடாகத் திறன்சார் விருத்தி வலுவடைகின்றது. ஆக்கத்திறன் விருத்தி, உற்பத்தித்திறன் விருத்தி, தொழில்சார் திறன் விருத்தி, தொழில் அனுபவம் என்பன போன்ற செயற்பாடுகளுடாக நிலையான அபிவிருத்திக்கு இச்செயற்பாடு இட்டுச்செல்வதாக அமைகின்றது. பொதுக்கல்வி நோக்கிலும் திறன் விருத்தி முக்கியத்துவம் பெறுகிறது. பெறப்படுகின்ற அறிவுத் தொகுதியை பயன்படுத்தக்கூடிய அளவுக்கு செயற்றிறன் விருத்தி அவசியமானதாகும். வகுப்பறைகளுக்குள் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து செயற்பட்டுக் கற்க வேண்டிய தேவை உள்ளது. செயற்படுவதற்கு, அல்லது இயக்குவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு கற்காத கற்றல் பயன் உடையதாக, வினைத்திறனோ அல்லது விளைத்திறனோ உடையதாக அமையமாட்டாது. எனவே ஆசிரியர்கள் மாணவர்களை ஆற்றலுடையவர்களாக மாற்றுவதற்கு ஆற்றுவதற்காக கற்றல் அவசியமாகிறது. இதுவும் கற்றலுக்கான கற்றலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வதற்காகக் கற்றல்

அறிவுத்தொகுதி விருத்தியாயினும் திறன் விருத்தியாயினும் மனிதன் வாழ்வதற்காக இட்டுச் செல்வனவாகக் காணப்படுகின்றன. அறிவதற்காக ஆற்றுதலுக்காக கற்றுக்கொள்ளும் போது இயல்பாகவே வாழ்வதற்காகக் கற்பதாகவே அமையும். வாழ்வதற்காகக் கற்கின்றபோது தனியாள் ஆளுமை விருத்தி, தீர்மானமெடுத்தல், செயற்படுதல், சுயபொறுப்புணர்வு, உயர்சிந்தனை ஆகியன விருத்தியடைகின்றன. இதனால் எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுத்து வாழும் நிலை உருவாகின்றது. எல்லா வகையிலும் வாழ்வதற்காகக் கற்றல் மேலோங்கி நிற்கிறது. பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல், விஞ்ஞான, தொழிநுட்பப் பின்னணிகளில் வாழ்வதற்காக, அவற்றினால், ஏற்படக்கூடிய சவால்களுக்கும், மாற்றங்களுக்கும் முகங்கொடுத்து வாழ்வதற்காக மனிதன் கற்க வேண்டியுள்ளது. தேசிய கல்வி இலக்குகளும் பிரதான கற்றல் தேர்ச்சிகளும் இதனைத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றன. அதற்காகவே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் திட்டமிடப்படுகின்றன. இச்செயற்பாடுகளைப் பொருத்தமாக திட்டமிடுவதற்கும், செயற்படுவதற்கும் ஆசிரியர்களும் வாழ்வதற்கான கற்றலில் ஈடுபட்டேயாக வேண்டும். ஆசிரியர்களே கல்வியில் வெற்றிக்கு மூல காரணிகள் என்ற வகையில் வாழ்வதற்கா கற்றல் கற்றலுக்கான கற்றலுக்கு வழி காட்டுகிறது.

## சேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல்

இன்றைய காலத்தின் முக்கிய தேவையாக மனிதன் சேர்ந்து வாழக் கற்க வேண்டிய தேவையுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியிலும் மனப்பாங்கு ரீதியான விருத்தி அவசியமானதாக உணரப்பட்டு வருகின்றது. தொழிநுட்ப ரீதியான தொடர்பாடல் வளர்ச்சியிலும் பூகோள மயமாக்குதல் (Globalization) நிலையில் பன்மை சமூகத்தினூடான வாழ்வும் தொடர்பும் கட்டாயமானதாக்கப்படுகின்றது. எனவே பன்மை சமூக உறவு, பரஸ்பர, நல்லுறவு, புரிந்துணர்வு, ஒருவருக்கொருவர் உதவுதல், கூட்டு முயற்சி ஆகிய பண்புகள் சேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல் மூலம் ஏற்படுகின்றது. உலகின் இன்றைய தேவையாக சேர்ந்து வாழுதல் என்பது பல பின்னணிகளாலும் வலியுறுத்தப்படுகின்றது. ஒவ்வொரு நாடுகளிலும் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல பிரச்சனைகளும் சிக்கல்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பூகோள மயமாகுதலின் தாக்கம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வு காண நாடுகள் பலவும் தமது கல்வி இலக்குகளையும், கல்விக் கொள்கைகளையும் வகுத்து அவற்றை அடைவதற்கு முயற்சி செய்து வருகின்றன. இவ்வகையில் வகுக்கப்பட்டுள்ள ஒன்பது தேசியக்கல்வி இலக்குகள் மேற்கூறப்பட்ட நான்கு தூண்களாகக் கருதப்படுகின்றன. அறிவதற்காக, ஆற்றுவதற்காக, வாழ்வதற்காக, சேர்ந்து வாழ்வதற்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் செயற்பாட்டிற்கு இட்டுச் செல்கின்றது. பொதுக் கல்வியிலும், தொழிற்கல்வியிலும் வாழ்க்கை நீடித்த கல்வியிலும் கற்றலுக்கான கற்றல் அவசியமானதாக கருதப்படுகின்றது. குறிப்பாக ஆசிரிய கல்வித்துறையிலும் இச்செயற்பாடு குறித்து அதிக கவனம் செலுத்தப்படுமாயின் மாறிவரும் உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய மாணவர்களை உருவாக்குவதற்கு உகந்த தேர்ச்சியுடைய நல்லாசிரியர்களை உருவாக்க முடியும்.

கற்றலுக்கான கற்றலில் ஆசிரியர்களும் மாணவர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டுமென தேசியக் கல்வி இலக்குகள் வலியுறுத்துவது போல 21ம் நூற்றாண்டிற்கான ஆசிரியர் மாணவர்களுக்கான தூர நோக்குகளும் (Visions) வலியுறுத்தி நிற்கின்றன. இந்த வகையில் 21ம் நூற்றாண்டிற்கான பிள்ளைகளது தூரநோக்கினையும் 21ம் நூற்றாண்டிற்கான ஆசிரியர்களது தூர நோக்கினையும் அறிந்திருப்பது அவசியமாகும்.

21ஆம் நூற்றாண்டிற்கான பிள்ளைகளின் தூர நோக்கு

- தர்க்க ரீதியான சிந்தனைகளும், பிரச்சனை விடுவித்தலும்.
- சவால்களுடைய நிலமைகளுக்கு முகம் கொடுத்தல்.
- வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளல்.
- இயந்திரம், பொறிகள், கருவிகள், உபகரணங்களுடன் வேலை செய்தல்.
- கற்றலையும் வேலையையும் நோக்கிய நேரான மனப்பாங்கு

21ஆம் நூற்றாண்டிற்கான ஆசிரியர்களின் தூரநோக்கு

- மாணவர்களுக்கு சவாலாகவும் அவர்களை ஊக்குவிக்கவுமான இயலளவு.
- பங்கெடுத்துக் கலந்துரையாடிக் கற்பித்தல்.
- சுயாதீனமும் சுய நம்பிக்கையும்.
- கூட்டுறவு, ஒத்துழைப்பு, கூடி வேலை செய்தல்.
- உருவாக்குதல், புதுப்பித்தல்.
- தொழிலிலும், சமூகத்திலும் ஆழமான தொடர்பாடலும் விளக்கமளித்தலும் செய்து காட்டலும்.
- வல்லமையளித்தல். (Empowered)

21ஆம் நூற்றாண்டின் பிள்ளைகளுக்கான ஆசிரியர்களுக்கான தூரநோக்குகளை அவதானிக்கும் போது அவற்றை நிறைவேற்றுவதில் கற்றலுக்கான கற்றல் செயற்பாடுகள் கல்வியின் நான்கு தூண்களும் பெரும் பங்காற்ற முடியும். இவைகள் கற்றலுக்கான கற்றல் அவசியத்தினையும் அவை கல்வியின் நான்கு பிரதான தூண்களான இருந்து ஆசிரியர் கல்வி தரமேம்பாட்டிற்கும், கல்வி இலக்குகளின் விரைவான அடைவிற்கும் உதவும் என்பது நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *தரமான கல்விக்குத் தரமான வாசிப்பு*

## - முனைவர் சபா. ஜெயராசா -

கல்வியுலகில் தரம் பற்றிய பேச்சு சமகாலத்தில் விரைந்து மேலெழுந்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் அமையம் இவ்வாண்டும் **தரமான கல்விக்குத் தரமான ஆசிரியர்கள்** என்ற எழுகை வாசகத்தை ஆசிரியர் தினத்தில் முன்வைத்துள்ளது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இதே எழுகை வாசகத்தை முன்வைத்தல் ஆசிரியர் தொடர்பான அணுகுமுறையில் உறைந்து இறுகிய மனோபாவத்தையே எடுத்துக் காட்டுகின்றது. **ஆசிரியர்** என்ற எண்ணக்கருவே **தரம் மேம்பட்டவர்** என்பதைப் புலப்படுத்தும் வேளை **தரமான ஆசிரியர்** என்று கூறுதல் ஒருவகையில் ஆசிரியத்துக்கு விடுக்கப்படும் அறைகூவல் என்று கூறலாம். அல்லது அவமானப்படுத்தல் என்றும் கூறலாம்.; கல்வி தொடர்பான அதிகாரக் கட்டமைப்பு ஆசிரியர் அந்தஸ்தை தாழ்த்துவதற்கே முற்பட்டுவந்துள்ளது.

ஆசிரியர்க்குரிய வேலைச் சூழலையும் நிலவரங்களையும் மேலோங்கச் செய்வதன் வாயிலாக கற்போருக்குரிய கற்றல் நிலவரங்களை மேம்படுத்த முடியும் என்ற அறிதலையும் கல்வியியலிலே முன்வைக்கப்பட்டுள்ளது. கற்போருக்குரிய நிலவரங்கள் (Conditions) என்ற எண்ணக்கருவில் வாசிப்பும் வாசித்தற் பொருட்களும் சிறப்பிடம் பெறுகின்றன.

அகன்ற வாசிப்பு, ஆழ்ந்த வாசிப்பு என்பவை வெறும் தட்டையான (Flat) எண்ணக்கருக்களே. வாசிப்பை இவ்வாறு இரண்டு பெரும் வகைப்பாட்டுக்குள் கூட்டு மொத்தமாக அடக்கிவிட முடியாது. வாசிப்பு ஒவ்வொன்றும் தனித்துவமானது. ஒவ்வொரு வாசிப்பிலும் தனித்துவமான பரிமாணங்கள் உள்ளடங்கிக் காணப்படும்.

நூலியத்தை (Text) அடிப்படையாகக் கொண்டே வாசிப்பு நிகழ்த்தப்படுகின்றது. நூலியம் குறிகள் (Signs) நிரற்கோடல்கள் (Codes) கருத்துவினைப்பாடுகள் (Discourses) முதலாம் பரிமாணங்களைக் கொண்டுள்ளது. இவை மொழிக்குரிய பரிமாணங்களாகக் கொள்ளப்படும். ஒவ்வொரு பாடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளுக்குமுரிய விதிகளை அடியொற்றியே நூலிய ஆக்கம் இடம் பெறும். விதிகளை அடியொற்றி மொழிநிலையும், மொழியசைவுகளும் மேற்கொள்ளப்படுவதால் நூலியங்கள் மொழி விளையாட்டுகளின் (Language Games) ஆக்கங்கள் என்றும் குறிப்பிடப்படும்.

ஒவ்வொரு நூலியமும் பிற நூலியங்களுடன் இணைப்பும், தொடர்பும், ஊடாட்டமும் கொண்டுள்ளது. இதனை உட்கோப்பு நூலியப்படல் (Inter textuality) என்பதில் ஆய்வுப்படுத்துவர். சில நூலியங்களில் பிற நூலியங்களில் இடம் பெற்ற கருத்துக்கள் தொடர்கள், பிரதிபலிப்புக்கள், நிழல்கள், கருத்து வினைப்பாடுகள் தெளிவாகப் புலப்படும். சிலவற்றில் அவை புலப்படாதிருந்தாலும் செல்வாக்குகள் உட்பொதிந்தேயிருக்கும். இதனால் ஒரு நூலியம் மற்றையதைக் குறித்து நிற்கும் இயல்பு உட்கோப்பு நூலியப் படலில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

வாசித்தல் என்பது கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்குரிய முன்னூட்டல் (Feed forward) நடவடிக்கையாகவும் அமையக்கூடிய இருபரிமாணங்களைக் கொண்டது. இவற்றால் அறிவு முன்னேற்றம் பெறுதலுடன் தவறுகள் துரத்திவிடப்படுகின்றன. சமகாலத்தில் நிகழ்ந்துவரும் அறிவின் பெருக்க வெடிப்பு முன்னர் கண்டறியப்படாத புலப்பாடுகளுக்கு இட்டுச் செல்லும் வேளை ஆசிரியரும் மாணவரும் காலாவதியான நிலையை அடையாதிருப்பதற்கு வாசிப்பே துணையும் வழியும் காட்டுகின்றது. “நாமும் - நூலும்” என்ற இடைவெளி பெருக்கமடைய கல்வியின் தரவீழ்ச்சி தவிர்க்க முடியாது ஏற்படத் தொடங்கும்.

சமகாலக்கல்வி அவலத்தின் குறியீடாகப் பொதுப் பரீட்சை முறை அமைந்துள்ளது. ஒவ்வொரு மாணவரும் பாடத்தின் ஒவ்வோர் அலகையும் விளங்கிப்படித்துக் கொள்ளும் நிலையை ஒவ்வொருமட்டத்திலும் ஏற்படுத்த முடியாத வறுமையிலேதான் பொதுப் பரீட்சைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவரையும் குவியப்படுத்திக் கற்பித்தலை மேற்கொள்ளலும், தாமாகவே வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டிவிடுதலும் என்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலையிலேதான் கற்கை நெறி முடிவில் பயமுறுத்தும் பொதுப் பரீட்சைகள் வைக்கப்படுகின்றன. பரீட்சை இரகசியம் என்ற மூடுமந்திரங்கள் உருவாக்கப்பட்டு உளவியல் நெருக்கீடுகள் மாணவரிடத்தே விதைக்கப்படுகின்றன. பரீட்சை முடிவுகளைப் பொதுத் தேர்தல் முடிவைக் காட்டிலும், கூடிய சமூக அழுத்தம் கொண்டதாக மாற்றியமைத்தலும், அதிகாரத்தின் வடிவங்களாக ஓரங்கட்டப்பட்ட மாணவர் மீது மேலும் அழுத்தங்களைத் தருவதாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் மாணவர் ஒவ்வொருவரையும் வளம்படுத்தவும் வலுவூட்டவும் வாசிப்பின் வலிமையான துணையை நாடவேண்டியுள்ளது.

வாசிப்பு எதுவுமின்றி ஆசிரியரின் குறிப்பை மட்டும் படித்துப் பொதுப்பரீட்சைகளிலே அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அவலமான நிலை காணப்படுகின்றது. இந்நிலையானது கல்வியமைப்பின் பலவீனத்தையே ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்துகின்றது. இதன் காரணமாக பொதுப் பரீட்சைகளிலே கூடிய புள்ளிகளைப் பெறுவோர் ஒரு குறிப்பிட்ட புலமை மட்டத்துக்கு மேல் நகர முடியாதவர்களாக இருக்கின்றனர். அவர்களாற் பெரும் கண்டுபிடிப்பாளர்களாகவோ பெரும் மேதாவி களாகவோ உருவாக முடியாத மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. சில சமயங்களில் இவ்வாறான பொதுப்பரீட்சைகளில் குறைந்த அடைவுகளைப் பெற்றோர் **ஜீனியஸ்** என்ற உச்சத்தை அடைந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

சமகால சமூகம் எண்ணிலடங்காப் பிரச்சினைகளின் தளமாக இயக்கம் கொண்டுள்ளது. கூடுதலான மனமுறிவையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தக் கூடிய உற்பத்தி முறைமையும் உற்பத்தி உறவுகளும், நுகர்ச்சிக்கோலங்களும் அதிகார அழுத்தங்களும், அதன் வழியான வன்முறைகளும் மேலோங்கியுள்ளன. இந்நிலையில் ஒடுக்கலுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாவோர் தமக்குரிய பாதுகாப்பு அறிகைக் கவசங்களை அமைத்துக் கொள்வதற்கு உதவும் சாதனங்களுள் வாசிப்பே தலைநிமிர்ந்து நிற்கின்றது. வாசிப்பு ஒரு முதலீடு என்பதை வாசிப்பு செயல்முறை நிறைவேறும் தொடர்ச்சியின் பொழுது தான் அறிந்து கொள்ளமுடியும்.

உளவியலிலே கற்றற் கோலங்களை அடிப்படைகளாகக் கொண்ட வாசிப்புக் கோலங்கள் பின்வருமாறு உருவாக்கப்பட்டுள்ளன. அவை:

1. வினைப்பாடு சார்ந்த வாசிப்புக் கோலம் - நம்பிக்கையும் புதியவற்றைத்தேடுதலும், நெகிழ்ச்சிப்பாங்கும் இங்கே காணப்படும்.

2. தெறிதல் நிலை வாசிப்புக் கோலம் - ஒழுங்குபடுத்திய வாசிப்பும், வரன் முறைப்பாடும் புதிய தகவல்களை ஒன்றிணைத்தலும் இங்கே மேலோங்கும்.

3. கோட்பாடு சார்ந்த வாசிப்புக் கோலம் - நியாயிக்கும் பண்பும், புறவயப்பண்பும் தருக்கப்பண்பும் இங்கே முன்னெடுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. செயல் நிலை சார்ந்த வாசிப்புக் கோலம் - பயன் கொள்நோக்கும் நடப்பியற் பிரயோகமும் இங்கே மேலெழுந்து நிற்கும்.

வாசித்தலோடு தொடர்புடைய ஒரு சிறப்பார்ந்த பரிமாணம் வாசிப்புப் பண்பாடு என்பதாகும். வாசிப்புக்குரிய ஊக்கல், அமைப்புவசதிகள், வாசிப்புப் பொருட்களின் தெரிவு, வாசிப்பினால் கிடைக்கப் பெறும் வெகுமதிகள், வாசிப்புத் தொடர்பான ஆதரவு வழிமுறைகள், குறுக்கீடுகள், முதலிய பல பண்புகள் வாசிப்புப் பண்பாட்டிலே உள்ளடங்கி நிற்கின்றன. சமகாலக் கல்வியிலே வலியுறுத்தப்படும் **தன்னிலை முகாமைத்துவம்** (Self Management) என்ற தொழிற்பாடு ஒவ்வொரு மாணவரிடத்தும் வளர்ச்சி பெற்று மேலோங்குவதற்கு வாசித்தலின் துணை ஆசிரியரின் துணைபோன்று வினைத்திறன் கொண்டதாக அமையும்.

நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட வாசிப்பு பல்வேறு பரிமாணங்களில் முன்னேற்றமடைந்து செல்லும், கற்போரின் அறிவாதாரங்கள் சார்ந்த எண்ணக்கரு விரிவாக்கம், பிரயோக நிலை மேம்பாடு, பொதுமையாக்கல், சிறப்புத்தேர்ச்சி, உளப்பரிசோதனை (Mental Experiment) தெறித்தல், கோட்பாட்டுச் சட்டங்களை உருவாக்குதல் முதலாம் பல்துறைப் பரிமாணங்களுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட வாசிப்பு இட்டுச் செல்லும்.

கல்வியின் சமகாலச் செயற்பாடு கல்வி நிறுவனத்தின் தரம், கலைத்திட்டத்தின் தரம் பரீட்சைகளின் தரம் என்பவற்றிலிருந்து **தனியாளின் தரம்** என்பதனை நோக்கி ஊடிணைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. தனிநபரின் தர நிர்ணயம் சமூகம் என்ற இயங்குதளத்தின் வழியாகவே நோக்கப்படுகின்றது. தனியாளின் தரநிர்ணயத்தில் **தொடரும் ஆளுமை மேம்பாடு** (Continuing Personality Development) அதிசிறப்பு வாய்ந்த தொழிற்பாடாகக் கருதப்படுகின்றது. தொடரும் ஆளுமை மேம்பாட்டுக்குரிய பலத்திலும் விசையிலும் வாசிப்பு ஒன்றிணைந்து கொள்கின்றது. ஆளுமையின் இடைவெளிகளை வாசிப்பு நீக்கிவிடுகின்றது.

தனிமனிதரை அவரது **வாசிப்பின் வழியாக இனங்காணுதல் அல்லது அடையாளப்படுத்தல்** என்ற செயற்பாடு நவீனகல்வி நடவடிக்கைகளில் எழுச்சி பெறத் தொடங்கியுள்ளது. அடையாள நெருக்கீடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே ஒருவர் வாசிப்பில் ஈடுபட வேண்டிய தேவைக்கு தள்ளப்படுகின்றார். தமக்குரிய படிமங்களைச் சமூகத்திலே தவழவிடுதற்குச் சமூக நடத்தைகளுடன் வாசிப்பினாற் பெறப்பட்ட பலத்தையும் விசையையும் ஒன்றிணைக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்பாகப்படுத்தல் என்ற பண்பும் பெருநிலை விசைப்படல் (Mega trends) என்ற பண்பும் சமகாலக்கல்வியிலே சமாந்தரமாக வளரத் தொடங்கியுள்ளன. கல்வியைக் கோளமயப்படுத்தல், கல்வி நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு பெருங்கவிப்புக்குள் கொண்டுவரப்படுதல், கல்வி அதிகாரங்களை ஒன்றிணைந்து பெரும் அதிகாரங்களுக்குள் கொண்டு வருதல் முதலியவை பெருநிலைப்படுத்தலுக்குச் சில எடுத்துக் காட்டுகள். இவ்வாறாக நிகழ்ந்து கொண்டிருக்கும் பெருநிலைப்படுத்தற் செயற்பாடுகள், தனிமனித அறிவாக்கத்திலே தொடர்ச்சியான செல்வாக்குகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. தனிமனிதருக்குரிய கல்வி வரை படத்தில் மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ள வேளை அவற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடிய தனிமனித ஆக்கத்திலே வாசிப்பின் பணிக்கூறு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வற்புறுத்தவும் படுகின்றது.

வாசிப்புச் செயற்பாடு வெறுமனே செயலூக்கமின்றி உள்வாங்கும் நடவடிக்கையாக இருத்தல் வினைத்திறன்மிக்கதாகக் கருதப்பட மாட்டாது. தகவல்களின் நேர்எதிர் முரண்பாடுகளைத் தரிசித்தலும், ஆக்கபூர்வமாகத் துலங்குதலும், சமூகம் தழுவிய வினைப்படுவோராய் மாற்றமடைதலும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளன. இந்நிலையிலே பாரம்பரியமான பேச்சுக்கலைக்கும் வாசிப்புக் கலைக்கு மிடையேயுள்ள இடைவெளிகள் சுட்டிக் காட்டப்படத்தக்கவை. மரபு வழிப்பேச்சுக்கலையிலே கேட்போர் கேட்டுச் சுவைக்கும் செயலூக்கம் குன்றிய (Passive) நுகர்வோராக இருக்கும் பண்பே வலியுறுத்தப்பட்டது. அங்கு ஒருபக்கத் தொடர்பாடலே விதந்துரைக்கப்படுகின்றது. ஆனால் வாசிப்புக்கலையானது வாசிப்போரிடத்து துலங்கலையும், தெறிப்பையும், வினைப்பாடுகளையும் ஏற்படுத்தும் செயலூக்க நிலையை நோக்கி உந்தப்படும் வினைத்திறன் வலியுறுத்தப்படுகின்றது.

வாசிப்புப் பொருட்கள் அச்சுவடிவிலும் கணினி வடிவிலும் பெருக் கெடுக்கத் தொடங்கியுள்ளன. நூல்களின் பெருக்கமும் இதழ்களின் பெருக்கமும் உலகளாவிய முறையிலே ஏற்படத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் வாசிப்புத் தொடர்பான ஆற்றுப்படுத்தல் பாடசாலைகளிலும், சமூகத்திலும் வறிதாகவேயுள்ளது. இதனை ஒருவித முரண்பாடென்றே குறிப்பிடலாம். இந்நிலையிலே வாண்மைக்கல்வி பெற்ற நூலகர்களின் பணி மேலும் முக்கியத்துவம் பெறுதலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்கான வாசிப்பின் படிமுறைகள்

**- க. சுவர்ணராஜா -**

பரீட்சைகளில் சித்தியடைவதற்கு கற்றவற்றை பொருத்தமான முறையில் முன்வைத்தல் வேண்டும். கற்றவற்றை பொருத்தமாக முன்வைப்பதற்கு, பொருத்தமான முறையில், திட்டமிட்டு பாடங்களையும் குறிப்புக்களையும் வாசிக்கவும் வேண்டும். ஆக்கபூர்வமான வாசிப்பு பழக்கம் எம்மிடையே இருக்குமாயின் நாம் வெளிப்படுத்தும் விடயங்களிலும் ஓர் ஆக்கபூர்வ தன்மையை ஏற்படுத்த முடியும்.

சிறப்பான ஒரு வாசிப்பு படிமுறைக்காக சிபார்சு செய்யப்படும் ஒருமுறை SQ3R முறையாகும். அதாவது.

S – Survey (எல்லைகளை தீர்மானித்தல்)
Q – Question (வினாக்களை முன்வைத்தல்)
R – Read (வாசித்தல்)
R – Recite (அழுத்துதல்)
R – Reciew (மீள் நோக்கல்)

## Survey:

பரீட்சைக்கான வாசிப்பின் முதற்படியாக அமைவது எல்லைகளை தீர்மானித்தல் (Survey) ஆகும். நாம் வாசிக்கப்போகும் அளவு, தலைப்பு, உபதலைப்பு, வாசிப்பதற்கு செலவழிக்கவிருக்கும் நேரம் என்பவற்றை திடமாக வரையறுத்துக் கொள்ளல் இப்படியின் முக்கிய நோக்கமாகும். மாணவர்கள் பரீட்சைகள் நெருங்கி வரும்போது எல்லா நூல்களையும், பாடக்குறிப்புக்களையும் மேசையில் அடுக்கி வைத்துக் கொண்டு எதனை வாசிப்பது, எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது எந்த பாடத்தினை முதலில் படிப்பது என தீர்மானிப்பதில் எதிர்நோக்கும் திண்டாட்டங்கள் அவர்களுக்கு மன உளைச்சல்களை மிகுதியாகத் தருவதுடன் இறுதியில் எதனையுமே பிரயோசனமாக வாசிக்க இயலாத நிலையினையும் ஏற்படுத்தி விடுவதுண்டு.

வாசிப்பின் ஆரம்பம், பாடம், பாடத்தின் அலகு, பாடத்தின் உப அலகுகள் என்றவாறு சுருங்கி, ஒரு குறிக்கப்பட்ட நேரத்தில் வாசிக்க வேண்டிய விடயம் பற்றியதொரு தெளிவான நிலையினை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னரே வாசிப்பினை ஆரம்பித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வாசிப்பதற்கு பொருத்தமான ஆவணத்தையும் இந்நிலையில் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். உதாரணமாக க.பொ.த.உயர்தர வகுப்பில் பொருளியல் பாடத்தினை கற்கும் மதன் என்ற மாணவனிடம், **பணம்** என்ற அலகு தொடர்பாக பாடசாலை ஆசிரியரின் பாடக் குறிப்பு, ரியூசன் ஆசிரியரின் பாடக்குறிப்பு, கடந்தமுறை பொருளியல் பாடத்தில் A தரச்சித்திப் பெற்ற நண்பனின் குறிப்பு மூன்றும் உள்ளது. இதில் எதனை பரீட்சைக்காக தயார்ப்படுத்த வாசிப்பது என்ற ஒரு சரியான தீர்மானத்தின் பின்னரே மதன் வாசிப்பினை ஆரம்பித்தல் வேண்டும். ஆகவே வாசிப்பதற்கு முன்னர் பாடத்திட்டத்தின் படியும் பரீட்சை எதிர்பார்ப்புக்களின்படியும் பொருத்தமான ஒரு குறிப்பினை, அல்லது நூலினை இனங்கண்டு கொள்ளல் வேண்டும். அவ்வாறு ஒரு ஆவணத்தை இனங்காண முடியாத நிலையில் ஒரு பொருத்தமான ஆவணத்தை மதன் தொகுத்துக் கொள்ள அல்லது உருவாக்கிக் கொள்ளல் வாசிப்பின் முதற்படியாக அமைதல் வேண்டும்.

பரீட்சைக்கான வாசிப்பின் போது பொருத்தமான ஆவணத்தை தெரிவு செய்து வாசிக்காத நிலையில் குறுகிய காலத்திற்கான வாசிப்பு பயன்குறைந்ததாக அமைந்துவிடும்.

## Question:

பரீட்சைக்கான வாசிப்பின் இரண்டாவது கட்டமாக அமைவது வினாக்கள் தொடுத்தலாகும். இங்கு வினாக்கள் தொடுத்தல் என்பது ஒரு சுய ஊக்குவிப்பு உத்தியாக அமைகின்றது எனலாம். உப அலகுகளையும், உப தலைப்புக்களையும் வினாவாக மாற்றியமைத்தல் வேண்டும். தெரிந்தவற்றை விரைவாக வாசிக்கும் பழக்கமும், மயக்கமானவற்றை தெளிவுபடுத்தி வாசிக்கும் மனநிலையும், தெரியாதவற்றை மிகக் கவனமாக வாசிக்கும் பண்பும் எமக்குள் உருவாகுகின்றது.

## Read:

பரீட்சைக்கான வாசிப்பின் மூன்றாவது படிமுறை வாசிக்க ஆரம்பித்தலாகும், இக்கட்டத்திலேயே நாம் உண்மையில் வாசிக்க ஆரம்பிக்கின்றோம். இப்போது வாசிப்பின்போது ஒரு முறை தெரிவு செய்த முழுப்பகுதியையும் வாசித்து முடித்தல் வேண்டும். தேவையான போது நிறுத்தி நிதானித்து வாசித்தல் வேண்டும். கஷ்டமான இடங்களில் மீண்டும் மீண்டும் வாசித்தல் வேண்டும். பந்திகள் பிரிக்கப்படுதல், உபதலைப்புக்கள் இடப்படுதல் என்பனவும் இங்கு இடம்பெறலாம். குறிக்கப்பட்ட நேரத்தில் வாசிப்பதற்கு உங்களால் முடியாத போது தெளிவுற்ற நிலையில் வாசிப்பினை நிறுத்திக் கொள்ள தயங்குதலும் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Recite:

நான்காவது கட்டமாக அமைவது அழுத்துதல் ஆகும். இக்கட்டத்தில் நாம் வாசித்தவற்றை நமது சொந்த வார்த்தைகளில் சுருக்கி எழுதுதல். உதாரணமாக பணம் அலகின் ஒரு உபதலைப்பு பணத்தின் பண்புகள் என்பதாகும். இங்கு வாசிப்பு நோக்கம் கருதி பணத்தின் பண்புகள் 5 என்றவாறு வினாவாக மாற்றியமைக்கலாம்.

வேறு வகையில் வினாக்கள் அமைப்பதாயின் பின்வரும் நுட்பத்தினை பயன்படுத்தலாம். அதாவது நாம் வாசிக்கப்போகும் அலகு தொடர்பாக கடந்த காலங்களில் வந்த பரீட்சை வினாக்களை தொகுத்து முன்வைக்கலாம்.

அல்லது இதுவரை எமது மனதில் வாசிக்கப்போகும் அலகு தொடர்பாக உள்ளவற்றை ஞாபகப்படுத்தி வினாக்களை முன்வைத்தலானது எமது மனம் வாசிப்பில் ஈடுபடும் முன்னர் மூன்று விதங்களில் பண்பட உதவுகின்றது. அவையாவன:

I. வாசிக்கப் போகும் அலகு தொடர்பாக நன்றாக தெரிந்த விடயங்கள்
II. வாசிக்கப் போகும் அலகு தொடர்பாக மயக்கமாக உள்ள விடயங்கள்
III. வாசிக்கப் போகும் அலகு தொடர்பாக தெரியாக விடயங்கள் என்பனவாகும் .

மேற்கண்ட நிலையில் மனதினை பக்குவப்படுத்தி நாம் வாசிப்பில் ஈடுபடும் பொழுது எண்ணக்கரு படம் வரைதல், அட்டவணைகள் இடல், அடிக்கோடிடல், தொகுத்து எழுதுதல், தெளிகாட்சி ஏற்படுத்தல் (Highlight) என்பன இடம்பெறும். ஒவ்வொருவரும் தமக்கேற்ற வகையில் அழுத்துதலை மேற்கொள்ளலாம். இக்கட்டத்தில் நாம் வாசித்தவற்றை எமது வசதிக்கேற்ப மீள உருவாக்கிக் கொள்ளும் நிலை அல்லது எமது ஞாபகப்படுத்தலை நிலை நிறுத்த வலுவாக்கும் நிலை உருவாகும்.

Review:

வாசிப்பின் இறுதிக் கட்டம் மீள் நோக்கல் ஆகும். இது உடனடியாக அல்லது சிறிது ஓய்வுக்கு பின்னர் நிகழும் செயற்பாடாகும். இச்செயற்பாடு சிறிது ஓய்வுக்கு பின்னர் இடம்பெறுதல் நன்றென உளவியலாளர்கள் கருதுகின்றனர். இக்கட்டத்தில் நான் வாசிப்பின் இரண்டாம் கட்டத்தில் அதாவது Questioning கட்டத்தில் முன்வைத்த வினாக்களுக்கு விடை எழுத அல்லது வாய்மொழிமூலம் எமக்குள் விடையளித்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *பிள்ளைகளின் கல்வி:*
## *பெற்றோர்கள்/ஆசிரியர்களுக்கான சில ஆய்வுக் குறிப்புகள்*

### - சோ. சந்திரசேகரம் -

மாணவர்களின் கல்வித்தேர்ச்சிக்கான காரணங்கள் பற்றிய ஆய்வுகள் இன்று மாணவர், ஆசிரியர், பெற்றோர் ஆகிய முத்தரப்பினரின் கூட்டு முயற்சியை வலியுறுத்துகின்றன. பெற்றோர்கள் எவ்வாறு தமது பிள்ளைகளின் கல்வித் தேர்ச்சிக்கு உதவலாம் என்னும் விடயம் பற்றி பெற்றோர்களுக்குச் சிறந்த ஆலோசனைகளை வழங்குவது கல்வியியல் ஆய்வாளர்களின் பிரதான கடமையாக உள்ளது.

சிறப்புச் சித்திகளைப் பெறும் மாணவர்களின் பின்புலத்தில் ஆசிரியர்கள், தனியார் போதனை நிலைய ஆசிரியர்கள் மட்டுமின்றி பெற்றோர்களும் இருக்கின்றார்கள் என்பதை நினைவிற்கொள்ளுதல் வேண்டும். கல்வித்துறையில் பணியாற்றுபவர்கள் ஆசிரியர்கள்; அவர்கள் பெற்றோர்களுமாவர். பல சந்தர்ப்பங்களில் தந்தையும் தாயும் ஆசிரியர் பணியாற்றும் போது, அத்தகைய பெற்றோர்களின் பிள்ளைகள் சிறந்த கல்விச் சித்திகளைப் பெறுகின்றனர். உதாரணமாக இன்று இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் கல்வி பயிலும் 65,000 மாணவர்களில், ஆசிரிய - பெற்றோர்களின் பிள்ளைகளின் தொகை, பிறதொழில்துறையினரை விட (உதாரணம்: மருத்துவர், சடடத்தரணி, கணக்காய்வாளர்) அதிகமாக இருக்கலாம் என்று நாம் கருதுகின்றோம். அதே வேளையில் நாட்டில் ஆசிரியர்களின் தொகை 2 இலட்சம் வரை; மேற்குறிப்பிட்ட தொழில் வல்லுனர்களின் தொகை ஒப்பீட்டு ரீதியில் குறைவு என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

எவ்வாறாயினும் பெற்றோர்கள் எவ்வாறு தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்குத் துணை புரியலாம் என்பது பற்றிய பல ஆலோசனைகளை வழங்கலாம் என்பது இக் கட்டுரையின் நோக்கம்; இதனைப் படிப்பவர்கள் எமது ஆலோசனைகள் பற்றியும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்; எமது ஆலோசனைகளைச் சுருக்கமாகவே தெரிவிக்க விரும்புகின்றோம்; பெற்றோர்களில் பலர் இவ்வாலோசனைகளை ஏற்கனவே தெரிந்தவர்கள் என்றும் யாம் நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 உங்களுடைய பிள்ளைகள் மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து படிப்பது மிகவும் பயனள்ளது; வகுப்பறையில் ஆசிரியரிடம் தனது ஐயங்களைக் கேட்டறியப் பிள்ளைகள் விரும்ப மாட்டார்கள், ஆசிரியர்கள் தமது வினாக்களைக் கவனத்திற் கொள்வார்களோ என்ற பயம் பிள்ளைகளிடம் இருக்கும். கூட்டாக மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து படிப்பதால், பிரதான விடயங்களை நினைவில் இருத்திக் கொள்ள முடியும். பல ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளவும் முடியும். மற்ற பிள்ளைகளின் ஐயங்களைத் தீர்த்து வைக்கும் பிள்ளை அவ்விடயத்தில் அதிக தெளிவைப் பெறுகின்றது.

 வகுப்பறையில் பிள்ளைகளின் கவனம் பாடவிடயத்தை விட்டு அலைபாயும் சந்தர்ப்பங்கள் உண்டு, இச் சந்தர்ப்பங்களைப் பிள்ளைகள் கண்டறிய வேண்டும் என அவர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். கண்டறிந்ததோடு, பாட விடயத்தில் மீண்டும் கவனம் (Refocus) செலுத்த வேண்டும் எனப் பெற்றோர்கள் வலியுறுத்த வேண்டும்.

 பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பாடசாலைப் பணிகளைப் பின்போடாமல், உடனுக்குடன் அவற்றை செய்து முடிக்குமாறு ஆலோசனை கூறுதல் வேண்டும், முன்னதாகவே திட்டமிட்டுப் பணிகளை முடித்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளப் பெற்றோர்கள் உதவ முடியும்.

 பிள்ளையைக் கண்டித்தல், தண்டனை வழங்குதல் என்னும் விடயங்களில் மட்டும் அக்கறை செலுத்தாது, பிள்ளை செய்து முடித்த பணிகளுக்கு உரிய பாராட்டை வழங்கப் பெற்றோர்கள் கற்றுக்கொள்ளல் வேண்டும், கண்டிக்க முற்படும்போது, எப்போதாவது பிள்ளையைப் பாராட்டியுள்ளோமா என்பது பற்றியும் பெற்றோர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

 வகுப்பறையில் பாடம் நடைபெறும் முன்னர் பிள்ளைகள் வீட்டில் குறிப்பிட்ட பாடத்தைப் பாடநூலைப் பயன்படுத்திக் கற்றுக் கொள்ள ஊக்குவிக்க வேண்டும். இதனால் பிள்ளை வகுப்பறையில் கற்பிக்கப்படும் பாடத்தை விளங்கிக் கொள்ள இலகுவாக இருக்கும்.

 பிள்ளைகள் எந்த நேரத்தில் படித்தால் அவர்கள் அதிக அளவில் கற்றுக்கொள்கின்றனர் என்பதைப் பெற்றோர்கள் கண்டறிய வேண்டும். அந்த வேளையில் பிள்ளை படிப்பதை அவர்கள் ஊக்குவிக்கலாம்.

 எப்போது படிப்பது? எவ்வாறு படிப்பது? ஒரு நாளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை முறை படிப்பது? இவை தொடர்பாகப் பிள்ளைகள் தாமாகவே தீர்மானம் மேற்கொள்ளப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

 பாடநூல்களில் உள்ள பாடங்களை வெறுமனே வாசிப்பதோடு நின்றுவிடாமல், அப்பாடத்தினை பிரதான விடயங்களைப் பிள்ளைகள் வேறாகக் குறிப்பெடுத்துக் கொள்வதும் முக்கியமானது. இக்குறிப்புகள் தெளிவானவையாக இருத்தல் வேண்டும்.

உங்களுடைய வயது வந்த பிள்ளை பாடசாலையில் நீண்ட நேரத்தைக் கழித்துவிட்டு வீடு திரும்புகிறார், உடனடியாக வீட்டில் பாடத்தைப் படிக்க அவர் விரும்பமாட்டார்கள். பாடசாலைகளில் உயர்வகுப்புகளில் பயிலும் பிள்ளைகள் சிறப்பாகப் படித்தால்தான் அடுத்த கட்டத்துக்கு உயர்கல்விக்குச் செல்ல முடியும். மேற்கண்ட ஆலோசனைகளைப் பெற்றோர் பயன்படுத்தி அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவமுடியும்.

பல பிள்ளைகள் முறையாக கற்கும் திறன்களைப் பெற்றிருப்பதில்லை. கல்வித் தேர்ச்சியைப் பெறுவதில் அவர்கள் தோல்வி காணுகின்றனர். கல்வித் தேர்ச்சியில் வெற்றி காணும் பிள்ளைகளோடு இவர்களை ஒப்பிட்டால் இப்பிள்ளைகள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருப்பர்.

- கற்றல் திறன்கள் போதாமை; இதனால் கற்பதில் ஒழுங்கின்மை
- தெளிவான கல்விசார் இலக்குகள் இல்லாமை;
- கற்பதற்கான திட்டம் இல்லாமை;
- கற்பதற்கான குறிப்பிட்ட உபாயங்களை வளர்த்துக் கொள்ளாமை
- தமது கிரகித்தல் திறன் பற்றிய சுயமதிப்பீடு இல்லாமை

கல்விதேர்ச்சியில் வெற்றி காணும் மாணவர்களின் பண்புகளாவன:

- தமது கற்றல் அனுபவங்களைத் தொடர்ந்து கண்காணிப்பர்.
- தமது கற்றலுக்குத் தாமே வழிகாட்டும் ஆற்றல் உடையவர்கள்
- தமது கற்றல் செயற்பாட்டைத்தாமே ஒழுங்கு செய்து கொள்ளும் மாணவர்கள், கற்றலில் விருப்புடையவர்களாக மாற்றம் பெறுவர்
- கற்பதில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்வர்

எவ்வாறு கற்றலில் தேர்ச்சி பெறலாம் என்பதை மாணவர்களுக்கு அறிவுறுத்தும் போது, அவர்கள் சிறப்பாகக் கற்க வாய்ப்பு ஏற்படுகின்றது, அத்துடன் அவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான திறன்களைப் பெற்றுக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையான மாணவர்கள் தாம் பாடத்தைப் படிக்கும்போது அது விளங்குமாயின் அவ்வாறான விளக்கம் பற்றி உணரக் கற்றுக் கொள்வர், சின்ன விடயம் விளங்கவில்லை என்பதையும் உணர்வர். இந்நிலையில் உங்கள் பிள்ளைகள்:

- படித்த விடயம் விளங்குகின்றதா என்பதைத் தீர்மானிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.
- பாடத்தில் விளங்கிய பகுதிகள், விளங்காத பகுதிகள் எவை என்பதை இனங்கான தெரிய வேண்டும்.
- முற்றாக விளங்காத பகுதிகள் பற்றித் தெளிவு பெற பாடசாலையின் உதவியைப் பெறக் கற்றுக் கொள்ள வேண்டும்.

பிள்ளைளைகள் படித்துக் கொண்டிருக்கும்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வசதியாகப் பெற்றோர்கள் அவ்விடத்தில் இருத்தல் வேண்டும். மாணவர்கள் தமது வினாக்களுக்கான விடைகளைத் தாமே கண்டறியப் பெற்றோர்கள் உதவவேண்டும். தாமே விடைகளை வழங்கக் கூடாது.

பிள்ளைகள் தமது நேரத்தைத் திறமையுடனும் புத்திக் கூர்மையுடன் பயன்படுத்தப் பெற்றோர்கள் உதவவேண்டும்.

- படிப்பதற்கான தேவை எப்போது ஏற்படுகின்றது என இனங்காணும் பிள்ளைகளுக்கு உதவ வேண்டும், பரீட்சைக்காக மட்டுமன்றி, வகுப்பறையில் விளங்கிக் கொள்ள முடியாதவற்றையும் பிள்ளைகள் கற்றாக வேண்டும்.

- பிள்ளைகள் படிப்பதற்கான கால அட்டவணை ஒன்றைத் தயாரிக்கப் பெற்றோர்கள் உதவலாம். விளையாட்டு மற்றும் வேறு பணிகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். கிழமை நாட்கள், வார இறுதிநாட்கள் என்பவற்றுக்கான கால அட்டவணை வேறுபடும்.

- ஒவ்வொரு வகையான பாடவிடயத்துக்கும் வெவ்வேறு நேரம் ஒதுக்கப்படும் வகையில் கால அட்டவணை தயாரிக்கப்படலாம்.

- நீண்ட நேர கற்றல் பணிகளை பகுதி பகுதியாகப் பிரித்தல், கடினமான பாட விடயத்துக்கு விழிப்பாக இருக்கும் நேரத்தை ஒதுக்குதல், சிறிய இடைவேளைகளுக்கு இடமளித்தல் என்பவை கருத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள்.

- பிள்ளைகள் தமது கற்றல் அனுபவங்கள், கற்றல் முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி சிந்திக்கவும் ஆராயவும் ஊக்குவிக்கப்படல் வேண்டும், படிக்கப் போதிய நேரம் கிடைத்ததா? எந்தக் கற்றல் முறை பயனுடையதாக இருந்தது? (உதாரணமாக, தனியாகக் கற்றல், சேர்ந்து கற்றல், நீண்ட நேரம் கற்றல், காலையில் கற்றல்), கற்றலில் கண்ட வெற்றி, தோல்வி முதலிய விடயங்கள் பற்றிப் பிள்ளைகள் தாமே சிந்திக்கத் தூண்ட வேண்டும்.

கற்பதற்கு சிரமப்படும் பிள்ளைகள் அவ்வாறு சிரமப்படக் காரணம் அவர்களிடம் சரியான ஒழுங்குமுறை (Lack of Organization) இல்லாமையாகும், எனவே பெற்றோர்கள் பின்வரும் முறைகளில் அவர்களுக்கு உதவமுடியும்.

- வெவ்வேறு பாடங்களுக்கான கற்றல் சாதனங்கள் (பாடநூல், குறிப்புகள், துணைநூல்கள், பயிற்சிப்புத்தகங்கள்) தனித்தனிக் கோவையாக (Folder) வேறுபடுத்தி வைக்கப்படல் வேண்டும். பயன்படுத்தியதும் அவை மீண்டும் அதே கோவை/கோப்புக்குள் வைக்கப்படல் வேண்டும். நல்ல Rubber band ஐப் பயன்படுத்தலாம்.

செய்து முடிக்கப்பட்ட வீட்டுப்பணிகள் பாடசாலைக்கு எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

தேவையற்ற பொருட்களைப் பாடசாலைப் பையிலிருந்து அகற்றிவிடல் வேண்டும்.

- பிள்ளைகள் செய்ய வேண்டிய கற்றல் பணிகள் எவை என்பதை ஒரு குறிப்பு புத்தகத்தில் பட்டியல் தயாரித்துக் கொள்ளுமாறு செய்ய வேண்டும், சில பாடசாலைகளில் இந்த ஏற்பாடு உண்டு.

- கற்றல் பணிகளை முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்திக் கொள்ளுமாறு பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

- பிள்ளைகள் கற்க விரும்பாது தவிர்த்துக்கொள்ள முயலும் பாடங்கள்/ பாடவிடயங்கள் எவை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர்கள் அதற்கான காரணங்களைத் தெரிந்து கொள்ள முயல வேண்டும். தெரிந்து கொண்டால் பிள்ளைகளின் தேவைகளுக்கேற்ப, வீட்டில் படிக்கும் முறையை (Study Plan) மாற்றியமைக்க வேண்டும். இது தொடர்பாக பாடசாலை ஆசிரியர்கள், ஆலோசகர்களுடன் கலந்துரையாடி ஆலோசனை பெறலாம்.

எந்த வேலையையும் முறையாகச் செய்ய பொருத்தமான சாதனங்கள்/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள் (Tools) தேவை. பெற்றோர்கள் கற்கும் பணியின் போது பிள்ளைகளுக்குத் தேவைப்படும் கருவிகள் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

பிள்ளைகள் நாம் படிப்பதற்குப் பொருத்தமான சூழல் எது என்பதைக் கண்டறிய பெற்றோர்கள் உதவ வேண்டும், சில பிள்ளைகள் மிக அமைதியான சூழலை விரும்புவர், வேறு சிலருக்கு சிறியளவு சத்தமும் குடும்ப உறுப்பினர்கள் அருகிலும் இருத்தல் வேண்டும், வெவ்வேறு சூழ்நிலைகளில் கற்கும் போது அவற்றில் பயனுள்ளது அல்லது கற்றலுக்குப் பொருத்தமானது எது என்பதைப் பிள்ளைகள் தெரிவு செய்யப் பெற்றோர் உதவமுடியும்.

வீட்டில் படிப்பதற்குப் பொருத்தமான ஓர் இடம் தெரிவு செய்யப்படல் வேண்டும், உணவு மேசை, அறையினுள் போடப்பட்டுள்ள மேசை என்பவற்றில் ஒன்றைத் தெரிவு செய்யலாம். பெற்றோர்களும் சகோதரர்களும் நடமாடும் சூழலை விரும்பும் பிள்ளைகளும் தனித்திருந்து கற்க விரும்புபவர்களும் இருப்பார்கள்.

தேவையான எழுதுகருவிகள், தாள்கள், குறிப்புப் புத்தகங்கள், வெளிச்சம் என்பனவற்றை வழங்குதல் வேண்டும். அகராதிகள், பிள்ளைகளுக்கான கலைக்களஞ்சியம் என்பனவும் வழங்கப்படலாம். தேவையான விடத்து நூல் நிலையத்தையும் இணையத்தையும் பயன்படுத்தப் பெற்றோர்கள் உதவலாம்.

இந்த ஆலோசனைகள் பெற்றோர் - ஆசிரியர் யாவருக்கும் பொருந்தக் கூடியது. இவையெல்லாம் ஆய்வு முடிவுகளில் இருந்து பெறப்பட்டவை. ஆகவே நாம் நமக்குப் பொருத்தமானதை கண்டு பிடிக்க வேண்டும். அந்த வழிகாட்டல் மூலம் நாம் ஆரோக்கியமான கற்றற் சூழலை உருவாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலைப் பாதிக்கும் காரணிகளும் ஆசிரியரும்

## - ஆர். லோகேஸ்வரன் -

"அனுபவம், பயிற்சி என்பவற்றின் மூலமாக ஏற்படும் நடத்தை மாற்றமே கற்றலாகும்." கற்றலுக்கான ஆற்றல் எல்லா உயிர்களிடத்திலும் உண்டு. ஆனால் இவ்வாற்றல் மிருகங்களிடம் சிறிதளவே காணப்படுகிறது. ஏனெனில் கற்றல் அவ்வுயிரிகளுக்கு சிறிதளவே காணப்படுகிறது. ஏனெனில் கற்றல் அவ்வுயிரிகளுக்கு சிறிதளவே தேவைப்படுவதாகும். ஆனால் இவ் ஆற்றலானது மனிதனிடம் பெருமளவில் உள்ளது. இதற்கு காரணம் மனிதனுக்கு கற்பதில் ஆர்வம் அதிகம் இருப்பதும், உற்றுநோக்கும் திறன், தொடர்ந்து கற்கும் ஆற்றல், குறியீடுகளை (Symbol) பயன்படுத்தி கற்கும் ஆற்றல் என்பன காணப்படுவதுமாகும்.

கற்கும் ஆற்றல் எப்போது தோன்றியது என்பது ஆராய்வுக்குட்பட்ட விடயமாகும். இது மனிதர் தோன்றிய காலத்திலிருந்தே ஆரம்பித்துவிட்டது என்பது கல்வியியலாளர்களின் கருத்தாகும். இவ்வாறு மனிதர் தோன்றிய காலத்திலிருந்தே ஆரம்பித்துவிட்ட கற்றலானது காலவோட்டத்தில் பல மாற்றங்களுக்குட்பட்டு இன்று ஒவ்வொருவருடைய வாழ்விலும் இன்றியமையாததாக காணப்படுவதுடன், உயிர்வாழ்வதற்கு ஆதாரமாகக்கூட உள்ளது. தற்போது கற்றலுக்கு வயது கூடத் தடையாக அமையவில்லை. ஆர்வமும், திறனும் உள்ள ஒருவர் எக்காலத்திலும் கற்கலாம் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் மனித வாழ்க்கையில் மிக அவசியமானதாக கொள்ளும் கற்றலானது மிக சிக்கலானது என உணரப்பட்டுள்ளது. அத்துடன் அதனை கட்டுப்படுத்தும் காரணிகளும் பலவாகும். அவையாவன:

குடும்பம், பாடசாலை, சகபாடி குழுக்கள், சமூகம், பொருளாதாரம், கலாசாரம், உள்ளீடுகள், ஊடகங்கள், எதிர்பாராத நிகழ்வுகள், உளவியல் அம்சங்கள்.

### குடும்பம்

பெற்றோர் அல்லது பெற்றோருடன் இணைந்து வாழும் உறவினர்கள் சமூகம் ஏற்கும் பண்பாட்டு மாதிரியொன்றை இலக்காகக் கொண்டு வாழும் போது அதனை குடும்பம் என்கின்றோம். பிள்ளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலைப் பாதிக்கும் காரணிகளில் மற்றெல்லாத் தாபனங்களையும் விட பெரும் பங்கினை வகிப்பது குடும்பமாகும். புளூம் தனது ஆய்வுகளிலிருந்து குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் அதன் இளம்பருவச் சூழ்நிலை கூடுதலான செல்வாக்கு செலுத்துகின்றது என்றும், அதில் குடும்பத்தின் பங்கு மிக முக்கியமானது என்றும் கூறுகின்றார். கோல்மன் அறிக்கை ஐக்கிய அமெரிக்காவில் கறுப்பு இன மக்களின் குழந்தைகள் வெள்ளை இன மக்களின் குழந்தைகளைவிட கல்வித் தரத்தில் ஓரளவு கீழ் நிலையில் இருப்பதற்குக் காரணம் பிள்ளைகளின் குடும்ப சூழ்நிலையின் தரம் குன்றிக் காணப்படுவதேயாகும் என்பதை தமது ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஒரு பிள்ளையின் கற்றலில் மிக வலுவான செல்வாக்கினைக் குடும்பமே பெற்றுள்ளது என்பதை மறுக்க முடியாது.

அந்தவகையில் குடும்பத்தில் நிலவும் வறுமை, பெற்றோர் பிள்ளைகள் மீது செலுத்தும் அக்கறை, பெற்றோர் பிரிந்துவாழ்தல், பெற்றோரிடையே காணப்படும் பூசல்கள், பெற்றோர் பிள்ளைகளை வளர்க்கும் முறை, (அதிக அன்பு செலுத்துதல்/அதிக கண்டிப்பு) அன்பு, காப்புணர்ச்சி அற்ற குடும்பச் சூழல், பெற்றோர் கல்வி தொடர்பாக அக்கறை செலுத்தாமை, பெற்றோரின் போதைப் பழக்கங்கள், பெற்றோரின் முன்மாதிரியற்ற நடத்தைகள் போன்றன பிள்ளைகளின் கற்றலை வெகுவாகப் பாதிக்கச் செய்கின்றன.

**பாடசாலை**

சமூக உறுப்பினர்களால் குறிப்பிட்ட இடத்தில், உரிய நேரத்தில் ஏற்ற சூழ்நிலையில் வகுக்கப்பட்ட விதிகளுக்கு அமைய கல்வி வழங்க ஏற்படுத்தப்பட்ட இடம் பாடசாலையாகும். கற்றலென்பது மனித வாழ்க்கையில் பிறப்புத் தொடக்கம் இடம்பெற்றாலும் முறையாக வகுக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு கல்வியை வழங்கும் நிறுவனம் பாடசாலை என்றால் அது தவறாகாது. இவ்வாறு பிள்ளைகளிடம் கற்றலை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பாடசாலைகளே சில வேளைகளில் அவர்களின் கற்றலுக்கு பாதகத்தை விளைவிப்பதாக அமைந்துவிடுகிறது. பாடசாலையில் இடம்பெறும் கவர்ச்சியற்ற பாடத்திட்டம், தீவிரமான கட்டுப்பாடுகள், வழங்கப்படும் தண்டனைகள், அதிபர்- ஆசிரியர் உறவில் காணப்படும் விரிசல்கள், முகாமைத்துவப் பிரச்சினைகள், பரீட்சை முறையில் காணப்படும் குறைபாடுகள், பாடசாலையில் நிலவும் மகிழ்ச்சியற்ற கற்றல் சூழல் என்பனவும் பாடசாலையில் கற்றலை ஏற்படுத்தும் முகவராக விளங்கும் ஆசிரியரது கட்டுப்பாடுகள், தண்டனைகள், கடுமையான போக்கு, தவறான முன்மாதிரி, பிள்ளைகளை அலட்சியப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை, திறமையற்ற பாடபோதனை என்பனவும் பிள்ளைகளின் கற்றலை பாதிப்பதாக அமைந்து விடுகின்றது.

**சகபாடி குழுக்கள்**

வயதிலும், சமூகமதிப்பு நிலையிலும் அண்ணளவான ஒருமைப்பாடு உடையவர்கள் சகபாடிகள் என்று அழைக்கப்படுகின்றனர். பிறந்த குடும்பத்துக்கு அடுத்தப்படியாக பிள்ளையில் அதிக செல்வாக்கைச் செலுத்தும் முகவராக விளங்குவது இதுவே. இன்றைய சமூக அமைப்பில் இது முக்கிய இடத்தை வகிக்கிறது. இச் சகபாடிக் குழுக்களானது ஆரம்பத்தில் விளையாட்டின் அடிப்படையில் (கூட்டு விளையாட்டு) இணைவதையே நோக்கமாக கொண்ட போதும் குமரப்பருவத்தை அடையும் போது தமது தேவை, விருப்பு என்பவற்றுக்கு ஏற்ப பல குழுக்களாக (ஒப்பார்குழு) இணைந்து செயல்படுகின்றது. இக்குமரப்பருவத்தில் குடும்பம், பாடசாலை என்பவற்றைவிட இக் குழுக்களின் செல்வாக்கே அதிகமாகக் காணப்படுகிறது. சிலபோது இச் சகபாடிக் குழுக்களின் செல்வாக்கு தீய சமூக விளைவுகளை தோற்றுவித்து இறுதியில் அது பிள்ளையின் கற்றலில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றது.

**சமூகம்**

பொதுவான கலாசாரத்தினால் பிணைந்து, பொது நோக்கங்களை மையமாகக் கொண்டு குறித்த தனித்தன்மைகளைக் கொண்ட மக்கள் கூட்டத்தை நாம் சமூகம் என்கிறோம். மொழி, பழக்கவழக்கம், ஒழுங்குமுறை, கருவிகளின் பயன்பாடு என்பவற்றை பிள்ளை சமூகத்தில் இருந்தே கற்றுக்கொள்கின்றது. இதனால் பிள்ளையின் கற்றலில் சமூகம் பல்வகையிலும் தாக்கம் புரிகின்றது. ஆயினும் பல சந்தர்ப்பங்களில் பிள்ளைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பு பிள்ளையின் கற்றலுக்கு தடையாகக் கூட அமைந்திருக்கும் சூழல் (சனநெரிசலான சூழல்), அயலவர்களது பிழையான நடத்தைகள், சமூகப் பாகுபாடு, சமூகத்தில் ஒதுக்கப்படல், பாதுகாப்பின்மை, இராணுவ நடவடிக்கைகள், சமூக வன்செயல்கள், சமூகத்தின் கல்வி பற்றிய எதிர்மறை மனப்பான்மை, சமூகத்தில் காணப்படும் மூடநம்பிக்கைகள் போன்றவை பிள்ளைகளின் கற்றலை பாதிக்கச் செய்கின்றது.

**பொருளாதாரம்**

பொருளாதார விருத்திக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கல்வி காணப்படுகின்றது. அதேவேளை கல்வி விருத்திக்கு பொருளாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியாக அமைகின்றது. மேற்படி கல்விவிருத்திக்கு பின்னணியாக விளங்கும் பொருளாதாரம் சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் கற்றலுக்கு தடையை ஏற்படுத்திவிடுகின்றது. அந்தவகையில் குடும்பத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடிகள், (பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள் குடும்பத்தால் பூர்த்திசெய்யப்படாமை) பிள்ளைகளின் பாடசாலைத் தேவைகள் நிறைவேற்றப்படாமை (உடைகள், காலணிகள், பயிற்சி புத்தகங்கள் பெற்றுக் கொடுக்க முடியாமை), வகுப்பறையில் காணப்படும் பொருளாதார ரீதியாக ஏற்றத்தாழ்வுகள் அதை அடிப்படையாக கொண்டு அவர்கள் புறக்கணிக்கப்படுதல் போன்றன பிள்ளைகளிடம் உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தி இறுதியில் அவர்களது கற்றலுக்கு தடையாக அமைந்துவிடுகின்றது.

**கலாசாரம்**

ஒரு சமூகத்தின் உயர்ந்த நடத்தை, அந்நடத்தையின் பெறுபேறு, அங்கு சமூக அங்கத்தவர்கள் பரம்பரையாக அப்பெறுபேறுகளை பயன்படுத்திக் கொள்ளல் கலாசாரமாகும். ஒரு கலாசாரத்துக்கு ஏற்ப நடந்து கொள்ளல், அதனைப் பாதுகாத்தல், அதனைப் பரப்புதல் என்பவற்றுக்கு கல்வி மிக அவசியமாகின்றது. ஆனால் கலாசாரமானது பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றது. அதாவது எமது பாரம்பரிய கலாசாரத்தில் அயற்கலாசார பாதிப்புகள் இடம் பெறுதல் (ஐரோப்பிய கலாசாரப் பாதிப்புகள்), எமது சொந்த கலாசாரத்தில் ஏற்படும் சீரழிவுகள், பாடசாலைக்கும் அல்லது வகுப்பறைக்கும் வேறுபட்ட கலாசார அம்சங்கள் காப்படுதல் (மேல்வர்க்கம்/கீழ்வர்க்கம்) போன்றன பிள்ளைகளின் கற்றலுக்குத் தடையை ஏற்படுத்துகின்றது.

**போதிய உள்ளீடுகள் இன்மை**

ஒரு நிறுவனத்தின் வெற்றியில் அல்லது உச்ச வெளியீட்டில் இரண்டு அம்சங்கள் இன்றியமையாதவையாக உள்ளது. ஒன்று தரமான உள்ளீடுகள் (Input), இரண்டாவது வினைத்திறனுடனான செயற்பாடுகள் (Process) இதில் உள்ளீடுகள் தரமானதாக இருக்கும் போதே வெளியீடுகளும் அதற்கமைவாக அமையும் என்பதே நியதி. இதனடிப்படையில் பாடசாலை மட்டத்தில் இன்று தரமான வளங்கள் உள்ளீடு செய்யப்படுகின்றதா? என்பது ஒரு வினாவாகவே உள்ளது. உள்ளீடுகள் பொருத்தமாக அமையாததன் காரணமாக பிள்ளைகளின் அடைவு அல்லது கற்றல் பல சவால்களை எதிர்நோக்கும் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. இதில் பாடசாலையின் பௌதீக வளங்கள், (தளபாடங்கள், வகுப்பறை, கற்றல் - கற்பித்தற் சாதனங்கள்) பயிற்றப்பட்ட ஆளணியினர் (பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தரமான அதிபர்கள்), வினைத்திறனுடனான முகாமைத்துவம், சிறந்த மேற்பார்வை போன்றவற்றில் காணப்படும் குறைபாடுகள் நேரடியாகவே பிள்ளைகளது கற்றலுக்கு இடையூறாக அமைந்துவிடுகின்றது.

**ஊடகங்கள்**

ஊடகங்கள் என்பது அண்மைக் காலங்களில் என்றும் இல்லாதவகையில் பெருகிச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது. இதில் வானொலி தொலைக்காட்சி, சினிமா, பத்திரிகைகள், பருவ இதழ்கள், இணையம் போன்றவை இன்று தமக்கிடையே போட்டி போட்டுக் கொண்டு இரசிகர்களை கவர்ந்திலழுப்பதில் புதிய நுட்பங்களையும், கைங்கரியங்களையும் கடைப்பிடிக்கின்றன.

இவற்றில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் ஒரு புறத்தில் பிள்ளைகளின் கற்றலுக்குச் சாதகமான போக்கைக் கொண்டிருந்தாலும் அனேகமானவை கற்றலைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளாகவே காணப்படுகின்றன. ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் அல்லது வெளியீடுகள் மக்களுக்கு பொழுதுபோக்காகவும், புதுமையான தகவல்களை (செய்திகளை) வழங்குவதாக அமைந்தாலும் அவற்றில் ஒளிபரப்பப்படும் அல்லது வெளியிடப்படும் பொருத்தமற்ற நிகழ்ச்சிகள்/வெளியீடுகள், தரம் குறைவான திரைப்படங்கள், பொருத்தமற்ற இணையதளப் பகுதிகள் (web pages) என்பன தற்போது பிள்ளைகளின் கற்றலை மிக அதிகமாக பாதிக்கச் செய்வதை காணமுடிகின்றது.

**எதிர்பாராத நிகழ்வுகள்**

எதிர்பார்த்து மேற்கொள்வது ஒரு வகை. ஆனால் எதிர்பாராமலே சில விடயங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்துவிடுவதும் உண்டு. இது எல்லோருடைய வாழ்க்கையிலும் பொதுவானதே. இவ்வகையில் கற்றலில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடும் பிள்ளைக்கு திடீரென தோன்றும் நோய்கள், விபத்துக்கள், பெற்றோரின் இழப்புக்கள், நாட்டில் இடம்பெறும் யுத்தங்கள், இனக்கலவரங்கள், சாதி முரண்பாடுகள் போன்றன அவர்களின் வாழ்க்கையை பாதிப்படையச் செய்யலாம். இவை ஒருவரால் எண்ணி ஏற்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராமல் நிகழ்வனவே. இவ்வாறான நிகழ்வுகள் கூட சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் கற்றலைப் பாதிக்கச் செய்கின்றது.

## உளவியல் அம்சங்கள்

மனித நடத்தையை விளக்க முற்படும் அறிவியலே உளவியலாகும். இங்கு கற்றல் என்பதும் நடத்தை மாற்றத்துடன் தொடர்புடைய ஒன்றேயாகும். பிள்ளைகளின் நடத்தை மாற்றத்தில் (கற்றலில்) பல்வேறு காரணிகள் தாக்கத்தை செலுத்தினாலும் அவை அனைத்துக்கும் அப்பால் உளவியற் காரணிகளும் தடையாக அமைகின்றன. அவை:

- தனியாள் வேறுபாடு
- கவனம்
- கவர்ச்சி
- மனப்பான்மை
- நுண்ணறிவு
- முதிர்ச்சி
- மனவெழுச்சி
- புலக்காட்சி
- மொழியும், சிந்தனையும்
- கற்பித்தல் முறை
- ஊக்கல்

போன்றவையாகும். இவை பிள்ளைகளின் இயல்பாலும் (மரபு) ஆசிரியரின் நடத்தைகளாலும் பாதிப்புக்குள்ளாகி கற்றலுக்குத் தடையாக அமைகின்றன.

மேற்கூறிய பல காரணிகள் கற்றலைப் பாதிப்பதாக அமைந்தாலும் அவற்றால் சில காரணிகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாத போதும் (மரபு நிலை) மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய காரணிகளில் உள்ள இடர்களை களைந்து கற்றலை விரைவுபடுத்துவதில ஆசிரியரின் பங்கு இன்றியமையாததாகும். இதற்கு ஆதாரமாக வாட்சன், மார்க்கிரட் மீட் போன்ற சூழ்நிலைவாதிகளின் ஆய்வு முடிவுகள் எடுத்துக் கூறுகின்றன. இவர்கள் பயிற்சிகள் மூலம் ஒருவனை எத்தகைய பண்புகளையும் பெற்று வளரச் செய்யலாம் என்பதை நிரூபித்துள்ளனர். எனவே ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட கற்றலைப் பாதிக்கும் காரணிகளின் தாக்கத்தை மறந்து தம்மிடம் கற்கும் பிள்ளைகளிடம் கற்றலை ஏற்படுத்த அல்லது விரைவுபடுத்த தன்னால் இயன்ற உதவிகள், நுட்பங்கள் என்பவற்றை கையாள்வது அவசியமாகும். அந்த வகையில் பிள்ளைகளிடம் கற்றலை அதிகரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது விரைவுபடுத்த ஆசிரியர் செய்யவேண்டியவை:

கற்றலுக்கு **ஊக்குவித்தல்** மிக இன்றியமையாதது. வகுப்பறையில் கற்றல் இடம்பெறுவதற்கு இது மிகவும் உதவுகிறது. ஊக்குவித்தலானது பிள்ளையை மேலும் கற்க உற்சாகப்படுத்துகின்றது. இதில் பரிசில்கள், பாராட்டுகள், புள்ளிகள் ஆசிரியரின் இன்சொல் என்பன கற்றலின் வெற்றியுடன் தொடர்புடையன. இவை பிள்ளைகளுக்கு மனநிறைவையும் தம்மதிப்பையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தி அவர்களை மேலும் உற்சாகத்துடன் கற்கத்தூண்டுபவையாகும். ஊக்கலின் முக்கியத்துவம் பற்றி நடத்தையியல் வாதியான ஸ்கின்னர் **கற்றலை அதிகரிக்க வலுவூட்டும் ஊக்கிகளை (பாராட்டு வெகுமதி, புள்ளிகள்) பயன்படுத்த வேண்டும்** என்கின்றார்.

ஆகவே உற்சாகத்துடன் பிள்ளைகளை கற்கத் தூண்டும் ஊக்குவித்தலானது அவர்களின் கற்றலை விரைவுபடுத்தும் என்பதை உணர்ந்து ஆசிரியர் வகுப்பறையில் அதனைப் பயன்படுத்துவது இன்றியமையாததாகின்றது.

Ø பிள்ளைகளிடம் இயல்பாகவே சில ஊக்கிகள் உண்டு. கற்றல் செயல்களில் இவ் இயல்பான ஊக்கிகளை வெளிப்படுத்த வாய்ப்பளிப்பது ஆசிரியரின் கடமையாகும். பிள்ளைகள் தமது இயல்பான ஆர்வம், தேவை, கவர்ச்சிகள் என்பவற்றுக்கு ஏற்ப கற்க வாய்ப்பை வழங்கும் போது அவர்களிடம் இயல்பாகவே உள்ள ஊக்கம் வெளிப்படும். எனவே அதற்கான சந்தர்ப்பம் வகுப்பறையில் வழங்கப்படல் வேண்டும். பிள்ளைகள் தமது திறமைகளை முழுமையாக வளர்க்க, ஆராய, செய்துபார்க்க இயல்பாகவே ஆர்வமுடையவர்கள் என்பது மாஸ்லோ, ஜெரோம் புரூணர், கார்ஸ் ரோஜர்ஸ் போன்ற உளவியலாளர்களின் கருத்தாகும். எனவே இவ் உளவியலாளர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி பிள்ளைகளிடம் இயல்பாகவே உள்ள ஊக்கிகளை பயன்படுத்தி கற்கச் செய்வது கற்றலை அதிகதிக்க செய்யும்.

Ø கற்றலில் பிள்ளைகளின் முயற்சிகள் ஓரளவேனும் வெற்றிபெறக் கூடியவாறு கற்றல் செயல்களை ஒழுங்கமைத்தல் வேண்டும். கற்றலில் பிள்ளை பெறும் ஒவ்வொரு வெற்றி பற்றிய உணர்வையும் பிள்ளைகளுக்கு அவ்வப்போது வழங்குவது மிக அவசியமாகும். இதனையே ஸ்கின்னர் தனது ஆய்வு முடிவில் **முறைப்படி அமைக்கப்பட்ட வலுவூட்டும் தூண்டல்கள் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவை சரியான நடத்தை தோன்றியவுடன் கற்போருக்கு அளிக்கப்பட வேண்டும்** என்கின்றார். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் ஒவ்வொரு வெற்றி பற்றியும் உடனடியாக அறிவிப்பது அவர்களின் கற்றலை விரைவுபடுத்தும்.

Ø கற்பித்தலில் ஆசிரியர்கள் வெறும் சொற்களை அதிகம் பயன்படுத்திக் கற்பிப்பது அனேக சந்தர்ப்பங்களில் பயனற்றுப் போகும். பல்வகை காட்சிப் பொருட்களை பயன்படுத்திக் கற்பித்தல், வண்ணப் படங்கள் கருத்துப்படங்கள், மாதிரி உருக்கள், உண்மை பொருட்கள் போன்றவற்றை பயன்படுத்தி கற்பித்தல் பிள்ளைகளுக்கு கூடிய பயனை அளிப்பதுடன் மிகப் பொருத்தமான புலக்காட்சி அனுபவங்களையும் வழங்கும். **காட்சிப் பொருட்களிலிருந்து கருத்துக்கு செல்லல்** என்பது குழந்தைகளின் கற்பித்தலில் மிக முக்கியமானதாகும். அத்துடன் **சொற்களுக்கு முன் பொருள்** என்ற பெஸ்டலோஜியின் கருத்தும் குறிப்பிடத்தக்காகும். எனவே இவற்றை ஆசிரியர்கள் கவனத்திலெடுத்து கற்பிப்பதன் மூலம் பிள்ளைகளின் கற்றலில் ஆர்வத்தை தூண்டச் செய்து அவர்களின் கற்றலை அதிகரிக்கச் செய்யலாம்.

Ø கற்க வேண்டிய விடயங்கள் எளிமையானதாக சிறு சிறு படிகளாக அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றின் ஒவ்வொரு படியிலும் பிள்ளைகள் சிறந்த விளைவை பெறும் வகையில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல் கற்றலை இலகுபடுத்தும் கற்றலில் நல்ல விளைவை பெறும் வகையில் சிறு சிறு படிகளாக ஒழுங்கமைத்து முன்வைக்கும் போது பிள்ளை இயல்பாகவே கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடும். **கற்றலை சிறுசிறு படிகளாக அமைத்து ஒவ்வொரு கருத்தும் அதற்கு முன்னுள்ள கருத்துடன் இணைந்து அமைய வேண்டும்** என்ற கருத்தை ஸ்கின்னர் தனது ஆய்வுகளின் மூலம் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு கற்றலை ஒழுங்குபடுத்தி முன்வைக்கும் போது அது கற்றலை விரைவுபடுத்தும் என்பதை ஆசிரியர் உணர்ந்து செயல்பட வேண்டும்.

Ø கற்றல் - கற்பித்தலின் போது ஆசிரியர் மைய அணுகுமுறையை குறைத்து குழந்தைகளது செயல்களுக்கு வகுப்பறையில் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பிள்ளை **செயல் மூலம் கற்க** அதிக வாய்ப்பை ஏற்படுத்தும் போது அது கற்றலை அதிகரிக்க செய்யும். **பிள்ளைகள் எல்லா உண்மைகளையும் தாமே முயன்று கண்டறிய வேண்டும். ஆசிரியரது பங்கு மிக மிக குறைவாக இருக்க வேண்டும்** என்பது முற்சிந்தனையாளரான ஆசுவெல் என்பாரது கருத்தாகும். எனவே கற்றலை விரைவுபடுத்த ஆசிரியர் தனது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் இவற்றை கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.

Ø இறுக்கமான, கண்டிப்புகூடிய வகுப்பறையைவிட மகிழ்ச்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புணர்ச்சியும் நிரம்பிய வகுப்பறைச் சூழ்நிலையையே பிள்ளைகள் விரும்புவது இயல்பு. ஆசிரியர் மாணவரிடம் அன்பும், பரிவும் காட்டி செயற்படின் இச்சூழ்நிலை இலகுவாகவே ஏற்படும். வகுப்பறைச் சூழ்நிலை பிள்ளைக்கு மனநிறைவைத் தருவதாக அமையும் போது கற்றல் இயல்பாகவே இடம்பெறும் இதனை கல்வியாளரான புரோபல் என்பாரின் கல்விச் சிந்தனையில் நாம் காணலாம். ஆகவே பிள்ளைகளது கற்றலை விரைவுபடுத்த முனையும் ஆசிரியர் இவ்வாறான வகுப்பறைச் சூழ்நிலையைத் தோற்றுவிப்பது கூடிய பயனையளிக்கும்.

Ø கற்பிக்கும் போது ஆசிரியர் புதிய கருத்துக்கள், அனுபவங்கள் என்பவற்றை உள்வாங்கக்கூடிய பின்னணி அறிவு ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ளதா என்பதைக் கண்டறிந்து தேவையான கருத்துக்களை அறிமுகப்படுத்தி புதிய கருத்துக்கள், அனுபவங்களை வழங்கும் போதே அது கற்றலை இலகுபடுத்தும். இவ்வகையாக **ஆசிரியர் தனது போதனையின் போது மிகப் பொருத்தமான பழைய அனுபவங்களை குழந்தைகளது மனதின் மேல் மட்டத்துக்கு எழுசெய்வதன் மூலம் கற்றலை ஏற்படுத்தலாம்** என கல்வி உளவியலின் தந்தையான ஹெர்பார்ட் குறிப்பிடுகின்றார். எனவே பிள்ளைகளிடம் கற்றலை அதிகரிக்க எத்தனிக்கும் ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடவிடயம் தொடர்பான பின்னணி அறிவு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் முக்கியமானதாகும்.

Ø பிள்ளைகளின் மரபுநிலை, சூழ்நிலை காரணமாக ஏற்படும் தனியார் வேறுபாடுகளை இனங்கண்டு அதற்கிசைவாக போதனைகளை ஒழுங்கமைக்கும் பொது அது எல்லா பிள்ளைகளிலும் கற்றலை ஏற்படுத்தும். இதில் மரபுநிலை எவ்வாறு அமைந்த போதும் சூழ்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் பிள்ளைகளிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதை சமூகவியலாளர்களான வாட்சன், மார்கிரட் மீட் போன்றோர் தமது பரிசோதனைகளில் நிரூபித்துள்ளனர். இதை கருத்திற் கொண்டு ஆசிரியர் எல்லா பிள்ளைகளிடமும் கற்றலை விரைவுபடுத்த செய்யும் வகையில் போதனைகளை ஒழுங்கமைத்துக் கொள்வது பயன்தரத்தக்கதாகும்.

Ø பிள்ளை தனது இலக்கை அடைவதற்கான வாய்ப்புக்கள் குடும்பத்தாலும், பாடசாலையினாலும் அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டும். இதில் ஆசிரியரின் பங்கு மிக இன்றியமையாததாகும். பிள்ளை ஆசிரியரால் புறக்கணிக்கப்படுமாயின் அது அவர்களின் இலக்கை வெகுவாகப் பாதிக்கச் செய்யும். எனவே பிள்ளை தனது இலக்கை அடைவதற்கான வழிகாட்டலை ஆசிரியரால் ஏற்படுத்தப்படும் போது அது பிள்ளையின் கற்றலில் ஊக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும் ஹாப், ஆட்கின்சன், மெக்லிலெண்டு போன்ற உளவியலாளர்களின் ஆய்வுகள் இதனை தெளிவாக்குகின்றது.

Ø கற்பிக்கும் பாடப்பொருளில் பிள்ளை கவனம் செலுத்தும் வகையில் உத்திகளை அல்து நுட்பங்களைக் கையாள்வதுடன் பாடநேர இறுதிவரை பிள்ளை பாடப்பொருளில் கவனம் செலுத்தும் வகையில் ஆசிரியரால் பாடத்தை முன்வைக்கும் போது அது பிள்ளையிடம் கவனச் சிதைவை ஏற்படுத்தும் எதிர் விளைவுகளை அகற்றி கற்றலை அதிகரிக்கச் செய்யும். இங்கு பிள்ளையின் கவனத்தை வகுப்பறைக்குள்ளேயே வைத்திருக்கும் வகையில் பார்த்துக் கொள்ள வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

Ø கற்றலில் கவர்ச்சியை அல்லது நாட்டத்தை பிள்ளைகளிடம் ஏற்படுத்தும் போது பிள்ளைக்கு மகிழ்ச்சியையும், மனநிறைவையும் கொடுக்கும். இதற்கு தாமே செய்து கற்க, விளையாட்டின் மூலம் கற்க, கண்டறிந்து கற்க வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல் வேண்டும். அவ்வாறு கொடுக்கும் போது பிள்ளைகளிடம் இயல்பாகவே கற்றலில் ஆர்வம் அல்லது கவர்ச்சி ஏற்படும். இதனை முற்போக்கு சிந்தனையாளரான ரூசோவும் வலியுறுத்தியுள்ளார். ஜோன்டூயி, புரூணர் போன்றோரும் தாமே கண்டறிந்து கற்றலை ஆதரித்துள்ளனர். எனவே இவ்வாறாக பிள்ளைகளிடம் கவர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் கற்றல் - கற்பித்தலை ஒழுங்கு செய்யும் போது அது கற்றலை விரைவுபடுத்தும்.

Ø பிள்ளைகளிடம் தன்னம்பிக்கையை வளர்க்கும் விதத்தில் அவர்களிடம் ஆசிரியர் நடந்து கொள்ளவேண்டும். தன்னம்பிக்கை வெற்றியடைய வாய்ப்புக்கள், அடைந்த வெற்றி பற்றிய உணர்வு போன்றன யாவும் பிள்ளைகளை கற்றலில் ஊக்குவித்து கற்றலில் ஈடுபாட்டுனை அதிகரிக்க செய்யும். இதனை கோமஸ், மாஸ்லோ கார்ள் ரோஜர்ஸ் போன்ற உளவியலாளர்கள் தம் ஆய்வுகளில் நிரூபித்துள்ளனர். எனவே பிள்ளைகளிடம் தன்னம்பிக்கையை வளர்ப்பதில் (கற்றல் தொடர்பான) ஆசிரியர் கவனம் செலுத்துவதன் மூலம் கற்றலை விரைவுபடுத்தலாம்.

Ø பிள்ளைகளிடம் பொருத்தமற்ற மனவெழுச்சியை ஏற்படுத்தும் காரணிகளை இனங்கண்டு அவற்றை போக்குதல் மிக அவசியமாகும். அத்துடன் மனவெழுச்சிகளின் இயல்பான இலக்குகளில் இருந்து அவற்றை திசைமாற்றி பயனுள்ள வழிகளில் வெளிப்படுத்த செய்வது ஆசிரியரின் பணியாகும். இதில் பாடசாலைக்குள் பொருத்தமற்ற மனவெழுச்சிகள் தோன்றுவதை தவிர்ப்பதன் மூலம் பிள்ளைகளின் கற்றலில் உள்ள தடைகளை நீக்கி அவர்களின் கற்றலை அதிகரிக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம்.

Ø ஆசிரியர் வெறுமனே வகுப்பறையில் மட்டும் பிள்ளைகளின் கற்றலை அதிகரிக்க உதவுவது மட்டுமன்றி பெற்றோரிடமும் பிள்ளைகளின் கல்வி தொடர்பான அக்கறையை ஏற்படுத்த உதவ வேண்டும். இதில் பாடசாலையில் மட்டுமன்றி பிள்ளைகளின் வீட்டிலும் கற்றலுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க செய்வது அவசியம். இதன் மூலமும் பிள்ளைகளின் கற்றலை விரைவுபடுத்த உதவலாம். பாடசாலை ஒரு சமூக நிலையம். அதில் ஆசிரியரும் ஓர் உறுப்பினர். ஆசிரியர் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் தலைவராகவார். எனவே சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள், மூட நம்பிக்கைகள், சாதி சமய வேறுபாடுகள், எழுத்தறிவின்மை போன்றவற்றை போக்கி சமூகத்தில் உள்ள இளம் உறுப்பினர்களான பிள்ளைகளின் கற்றலுக்கு உதவுவதுடன், அப்பிள்ளைகளுக்கு உதவும் வகையில் சமூகத்தை வழிநடத்துவதும் ஆசிரியரின் கடமையாகும். இதனூடாகவும் பிள்ளைகளின் கற்றலை அதிகரிக்க செய்ய உதவும்.

**முடிவுரை**

பிள்ளைகளின் கற்றலில் பல்வேறு காரணிகள் பாதிக்க செய்கின்றன. இப்பாதிப்பிலிருந்து நீங்க குடும்பம், பாடசாலை சமூகம் ஆகியவற்றின் ஒத்துழைப்பு மிக அவசியமாகின்றது. இதில் பிள்ளைகளின் கற்றலில் ஆரம்ப காலங்களில் குடும்பமே கூடிய செல்வாக்கை பெற்றிருந்தது. ஆயினும் இன்று அதன் செல்வாக்கு குறைக்கப்பட்டு அவற்றையும் ஆசிரியர்களே ஏற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதற்கு ஆசிரியர் நல்லதோர் வழிகாட்டியாக செயற்பட வேண்டியுள்ளது. பிள்ளைகளுக்கு கற்க உதவுவதும், கற்றலில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்களை களைய உதவுவதும், கற்கும் பாடங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தி தேர்ச்சிபெற உதவுவதும் ஆசிரியரின் முக்கிய பணியாக உள்ளது. எனவே பிள்ளைகள் கற்றலில் எதிர்நோக்கும் தடைகளை இயன்றவரை அகற்றி பிள்ளைகளின் கற்றலை விரைவுபடுத்தும் அல்லது அதிகரிக்கும் பயிற்சிலை அளிக்கக்கூடிய திறன்மிக்கவராக ஆசிரியர் விளங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய எதிர்காலத்தில் ஆசிரியர்கள் தம்மை தயார்ப்படுத்திக் கொண்டு செயல்படுவது மிக அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை

இச்சிறு தொகுப்பு நூலின் உள்ளடக்கம் பல்வேறு இணையத் தளங்கள், நூல்கள், இதழ்களிலிருந்து நன்றியுடன் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அவற்றின் பதிப்புரிமை மூலக் கட்டுரை ஆசிரியர்களினுடையதே ஆகும்.

- திருக்குறள் பகுதிகள் http://www.tamilvu.org தளத்திலிருந்து பெறப்பட்டன.
- நாலடியார் http://www.tamilkalanjiyam.com தளத்திலிருந்து பெறப்பட்டது.
- அறிவு என்ற கட்டுரை http://ta.wikipedia.org தளத்திலிருந்து பெறப்பட்டது.
- கல்வியின் நோக்கங்கள் என்னும் பகுதி அருளானந்தம் சிறீகாந்தலட்சுமி எழுதிய **நூலக தகவல் அறிவியல் ஆய்வுக் கோவை** என்ற நூலின் ஒரு கட்டுரையின் ஒரு பகுதியாகும்.
- இலங்கையின் கல்வித்துறை என்ற பகுதி **கேசரி தகவல் களஞ்சியம் 2011** என்ற நூலின் கல்வித்துறை என்ற கட்டுரையின் ஒரு பகுதி ஆகும்.
- க. பேர்னாட், சபா. ஜெயராசா, க. சுவர்ணராஜா, சோ.சந்திரசேகரம், ஆர். லோகேஸ்வரன் ஆகியோரது கட்டுரைகள் **அகவிழி** இதழ்களிலிருந்து பெறப்பட்டவை ஆகும்.

அகவிழி இதழ்களையும் கல்வியியல் தொடர்பான பல்வேறு இதழ்கள், நூல்களையும் நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) தேடி வாசிக்கலாம். இந்த www.noolaham.org வலைத்தளத்தில் பத்தாயிரத்துக்கும் (10,000) அதிகமான எழுத்தாவணங்கள் உள்ளன.

தெ. மதுசூதனனை ஆசிரியராகக் கொண்டு வெளியான அகவிழி இதழ் நின்றுவிட்டது. அதே ஆசிரியரால் இப்பொழுது ஆசிரியம் எனும் இதழ் வெளியிடப்படுகிறது. கற்றல், கற்பித்தல் தொடர்பான பயனுள்ள பெருமளவு கட்டுரைகள் இந்த இதழ்களில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org